بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்)

அஸ்ஸலாம் ஐ பாதுஷாஹே அன்பியா
அஸ்ஸலாம் ஐ ஹலரத்தே கைருல் வரா

(நபிமார்களுக்கெல்லாம் சக்கரவர்த்தியானவர்களே! மனிதர்களிலெல்லாம் மேலானவர்களே!! தங்கள் மீது என் ஸலாம் உண்டாவதாக!!!)

அஸ்ஸலாம் ஐ ஸீனத்தெ ஃபர்ஷே ஸமீன்
அஸ்ஸலாம் ஐ ஜானிஷே அர்ஷே ஃபரீன்

(இம்மண்ணுலகை அணி செய்பவர்களே! மாண்புமிகு அர்ஷிற்கு உயிர் போன்றவர்களே!! தங்கள் மீது என் ஸலாம் உண்டாவதாக!!!)

அஸ்ஸலாம் ஐ தாஜுதாரே ரஹ்னுமா
அஸ்ஸலாம் ஐ இப்திகாரே ஹல்அதா

(நேர்வழி காட்டுபவர்களுக்கெல்லாம் மகுடம் போன்றவர்களே! நிலையான பெருமைக்கு உரியவர்களே!! தங்கள் மீது என் ஸலாம் உண்டாவதாக!!!)

அஸ்ஸலாம் ஐ தஸ்தகீரே பேகிஸான்
அஸ்ஸலாம் ஐ ரஹ்பரே குல்கும்ரஹான்

(ஆதரவற்ற ஏழை எளியவர்களைக் கரம் பிடித்துக் காப்பாற்றுகின்றவர்களே! வழி தவறியவர்களுக்கு நேர்வழி காட்டுகின்றவர்களே!! தங்கள் மீது என் ஸலாம் உண்டாவதாக!!!)

அஸ்ஸலாம் ஐ முஜ்தபா வ முஸ்தபா
அஸ்ஸலாம் ஐ பர்குஸீதா அன்பியா

(தெளித்து வடித்துத் திருமணியாக்கப் பட்டவர்களே! நபிமார்களில் தலைமைத் தனத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே!! தங்கள் மீது என் ஸலாம் உண்டாவதாக!!!)

அஸ்ஸலாம் ஐ மேரே நானா அஸ்ஸலாம்
தர்ப ஹாளிர் ஹைதுமாரா ஏ குலாம்

(என்னருமைப் பாட்டனாரே! தங்கள் மீது என் ஸலாம் உண்டாவதாக!! தங்களின் திருமுன் தங்களின் அடிமை வந்து நிற்கின்றான்.)

இவ்வாறு ஹிஜ்ரி 583-ஆம் ஆண்டில், காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் மக்கா சென்று 'ஹஜ்'ஜுச் செய்துவிட்டு, மதீனா சென்று அண்ணல் நபி (ஸல்) அவர்களின் புனித அடக்கவிடத்தின் முன் நின்று கைகட்டித் தாழ்மையுடன் 'ஸலாம்' உரைத்த பொழுது 'வ அலைக்கு முஸ்ஸலாம் யா சுல்தானுல் அவ்லியா வ யா ஹிந்துல் வலீ' என்று அவ் அடக்கவிடத்திலிருந்து பதில் வந்தது.

அது கேட்டு ஆண்டகை அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. தம் ஸலாத்திற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தம் அடக்கவிடத்திலிருந்து அமுதவாய் திறந்து பதிலுரைத்ததும், தம்மை இரு அடைமொழிகளால் அழைத்ததும் அவர்களுக்கு அளப்பரும் வியப்பை நல்கின. முதல் அடைமொழியின் பொருளை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். இரண்டாவது அடைமொழியின் பொருளை விளங்காது அவர்கள் திணறிக் கொண்டிருந்தார்கள்.

இதன்பின் நாற்பது நாட்கள் அண்ணல்நபி (ஸல்) அவர்களின் பொன்னுடல் பொதியப் பெற்றிருக்கும் அப் புனித பூமியில் தங்கி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது, ஆயிரம், ஆயிரம் அல்ல, இலட்சோப லட்சம் ஸலவாத்துகளையும், ஸலாம்களையும் பொழிந்து கொண்டிருந்தனர் ஆண்டகை. அப்பொழுது ஓரிரவு அவர்களின் கனவில் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, அவர்களை இந்திய நாடு சென்று, அங்குள்ள அஜ்மீர் நகரில் தங்கி தீன் சுடர் கொளுத்துமாறு ஆணையிட்டார்கள்.

தம்மை 'ஹிந்துல் வலீ' என்று முன்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அடைமொழியிட்டு அழைத்ததற்கான காரணத்தை விளங்கிக் கொண்ட ஆண்டகை அவர்களுக்கு அக்காலை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அஜ்மீர் இருக்கும் திசையையும் காட்டி மறைந்தனர்.

வாழ்க சுல்தானுல் அவ்லியா! வாழ்க ஹிந்துல் வலீ!!



அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழித்தோன்றல்கள் மீது அப்பாஸியக் கலீபாக்கள் ஆற்றிய கொடுமை தாங்க இயலாது, பக்தாதில் வாழ்ந்து வந்த ஹுஸைன் (ரலி) அவர்களின் வழித்தோன்றல்களில் சிலர் இஸ்ஃபஹானில் வந்து குடியேறி வாழ்ந்து வரலாயினர். அக் காலத்தில் இஸ்ஃபஹான், சீரும் சிறப்புடன் இலங்கி வந்தது. இஸ்ஃபஹான் நிஸ்ஃபுல் ஈரான் (இஸ்ஃபஹான் ஈரானில் பாதி) என்னும் புகழ்ப் பெயர் பெற்று விளங்கிய அந்நகரம், ஐரோப்பிய நகரங்களான ரோம், ஏதன்ஸ் ஆகியவற்றிற்கு நிகரான வளமார் திரு நகரம் என்று மேல் நாட்டின ராலேயே கணிக்கப்பட்டு வந்தது.

இஸ்ஃபஹானில் வந்து குடியேறி வாழ்ந்து வந்த அந்த 'சையிது' குடும்பத்தில் தோன்றிய காஜா சையிது அப்துல் அஸீஸ் என்ற பெரியார், ஒரு தடவை 'ஹஜ்'ஜு செய்ய மக்கா சென்ற பொழுது கஃபாவின் வாசலுக்கும் 'ஹஜ்ருல் அஸ்வத்' பதிக்கப்பட்டிருக்கும் மூலைக்கும் இடையிலுள்ள, இறைஞ்சுதல் ஏற்றுக் கொள்ளப்படும் இடமாகிய முல்தஜிமில் நின்று கொண்டு, கஃபாவின் திரையைப் பிடித்த வண்ணம், ''இறைவ! எம்பெரும! உன் நேசர்களின் மாண்பாளர் ஒருவரை என் வழியில் தோன்றச் செய்வாயாக!'' என்று கண்ணீருடனும், கம்பலையுடனும் இறைஞ்சி நின்றார்கள்.

தம் இறைஞ்சுதல் வீண் போகாது; இறைவன் அதனை நிச்சயம் நிறைவேற்றித் தருவான் என்ற நம்பிக்கையுடன் இஸ்ஃபஹான் திரும்பிய அவர்கள், தம் இறப்புப்படுக்கையில், தம் மகன் சையிது கியாஸுத்தீன் ஹஸனை அருகழைத்து, தாம் ஹஜ்ஜுச் செய்ய மக்கா சென்றிருந்த பொழுது, கஃபாவின் திரையைப் பிடித்த வண்ணம் தாம் இறைஞ்சிய இறைஞ்சுதலை எடுத்துரைத்து, ''மகனே! நீ ஹஜ்ஜு செய்யச் செல்லும் பொழுது, என்னுடைய இந்த இறைஞ்சுதலை இறைவன் நிச்சயம் நிறைவேற்றித் தருவான் என்று இந்த அடியான் இறுதி வரை நம்பிக் கொண்டிருந்தான் என்பதை நினைவுறுத்தும்'' எனறு கூறிவிட்டுத் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள்.

சையிது கியாஸுத்தீன் ஹஸன், அந் நகரில் வாழ்ந்து வந்த ஹஸன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய சையிது தாவூது என்ற பெரியாரின் அருமைத் திருமகள் உம்முல்வரா என்ற சையிதா மாஹினூரை மண முடித்து, இல்வாழ்க்கையை இன்பகரமாகக் கழித்து வந்தனர். அந்த இளம் தம்பதிகள் செய்த அருந்தவப் பயனாக, அவர்களுக்கு ஹிஜ்ரி 530-ஆம் ஆண்டு ரஜப் பிறை பதினான்கு (கி.பி. 1116-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் நாள்) வெள்ளிக்கிழமை வைகறையில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு அவர்கள் முயீனுத்தீன் (இஸ்லாத்தை வலுவுறச்

செய்தவர்) என்னும் அழகு சால் திருப்பெயரிட்டு, அருமை பெருமையாக வளர்த்து வந்தனர். பின்னர் அவர்களுக்கு இரண்டு ஆண் மக்களும் பிறந்தனர்.

இச் சமயத்தில் தார்த்தாரியர் இஸ்ஃபஹான் மீது கடுமையான தாக்குதல் நடத்தி, அதனை நாசப்படுத்தி வந்தனர். எனவே சையிது கியாஸுத்தீன் ஹஸன் தம் குடும்பத்தினருடன், அந் நகர் விட்டு நீங்கிக் குராஸானில் குடியேறினார்.

அவரின் அருமந்த மைந்தர் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், இளமையிலேயே மற்றச் சிறுவர்களை விட்டும் மாறுபட்டவர்களாக விளங்கினர். சின்னஞ் சிறு பருவத்திலேயே அவர்கள் அன்பு, இரக்கம், தயை ஆகிய அரும்பெரும் குணங்கள் வாய்க்கப் பெற்றிருந்தனர். எவரேனும் ஒரு பெண் தன் குழந்தையுடன் அவர்களின் அன்னையைப் பார்க்க, அவர்களின் இல்லம் வந்திருக்கும் பொழுது அக்குழந்தை அழுதால், உடனே அவர்கள் தம் பிஞ்சு விரலால் தம் அன்னையிடம் அக் குழந்தையைச் சுட்டிக்காட்டி, அதற்குப் பால் கொடுக்குமாறு சைகை செய்வர். அதனை உணர்ந்து அவர்களின் அன்னையும், அக் குழந்தையை வாரி எடுத்துத் தம் மடிமீது வைத்து அமுதூட்டுவார். அதுகண்டு அவர்கள் மகிழ்ச்சியுறுவார்கள்.

அவர்கள் மூன்று அல்லது நான்கு வயதுச் சிறுவராக இருக்கும் பொழுதே, அவர்கள் தம் வயதொத்த சிறுவர்களைத் தம் இல்லம் அழைத்து வந்து தின்பண்டங்கள் கொடுப்பார்கள். அவர்கள் அதனைக் கடித்துத் தின்பதைக் கண்டு, இவர்கள் களிபேருவகை கொள்வார்கள்.

ஒரு பெருநாளன்று அவர்கள் புத்தாடை புனைந்து, நறுமணம் பூசி ஈத்காஹ்வுக்குத் தொழச் சென்ற பொழுது, வழியில் பார்வையற்ற ஒரு சிறுவன், கிழிந்த ஆடையுடன் நிற்பதைக் கண்டு அவர்களின் அன்புள்ளம் இரங்கியது. உடனே அவர்கள் தாம் அணிந்திருந்த உடைகளில் சிலவற்றைக் களைந்து அவனுக்கு உடுத்தி, அவனைத் தம்முடன் ஈத்காவுக்கு அழைத்துச் சென்றனர்.

இளமையில் அவர்கள் மற்றச் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடச் செல்வதில்லை. மாறாக, பள்ளி சென்று கல்வி பயின்றனர். ஒன்பது வயதிற்குள் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்துவிட்ட அவர்கள், பின்னர் ஃபிக்ஹ் நூல்களையும், ஹதீஸ் நூல்களையும் பயின்று தேர்ச்சியுற்றனர்.

அவர்கள் சின்னஞ்சிறு வயதினராயிருக்கும் பொழுதே, அவர்களின் அன்னை இறந்துவிட்டார். அவர்கள் பதினைந்து வயதை எய்திய



பொழுது, அவர்களின் தந்தையும் இறப்பெய்தினார். அவர்கள் இப்பொழுது ஓர் அநாதை!

எனினும் அவர்களுக்குத் தந்தை வழியாகத் தண்ணீர் இறைக்கும் காற்றாடியுடன் கூடிய பழத்தோட்டம் ஒன்று வாரிசு பாத்தியமாகக் கிடைத்தது. அதிலிருந்து கிடைத்த வருவாயைக் கொண்டு, அவர்கள் எளிய முறையில் இனிதே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் தம் தோட்டத்தில் அமர்ந்து ''இறைவனே! நான் என்று காண்பேன் உன் இல்லத்தை?'' என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு கவிதை காற்றிலே மிதந்து வந்து, அவர்களின் செவிப் புகுந்ததும், அவர்களின் உடலெல்லாம் புல்லரித்தது.

கவிதை வரும் திசையை நோக்கி அவர்கள் தம் செவியைத் தாழ்த்திக் கேட்டார்கள். ஆஹா! அந்தக் கவிதையிலே தான் என்ன இனிமை! என்ன இன்பம்!!

**சுருமன் ஹவீத்தவயின் ஷதத்தபிக் கத்தாரு**
**வ ஹால மின்தூனிஹி ஹுஸ்புன் வ அஸ்த்தாரு**

> காதல் கொண்டவனே! நீ உன் காதலியைக் கண்ணால் தரிசித்துவிடு! அவளுடைய இல்லம் வெகு தொலைவில் இருந்த போதினும், அறிவின் திரைகள் உன் கண்களை மறைத்த போதினும், காதல் கொண்டவனே! நீ உன் காதலியைக் கண்ணால் தரிசித்துவிடு!!

இந்த இரண்டு அடிகளை அவர்கள் செவியுற்றதும், அவர்கள் பரவச மெய்தினார்கள்.

மீண்டும் கவிதை தொடர்ந்தது:

**லாயம்ன அன்னக்க புஃதுன் அன்ஸியாரத்திஹி**
**இன்னல் முஹிப்பலிமன் யஹ்வாஹு ஸவ்வாரு**

> அவனின் இல்லம் தொலைவிலிருப்பது உனக்கு ஒரு தடங்கலாக இருக்கவேண்டாம். காதல் மீக்குற்றவனே! உன் காதலி உன்னைக் காணத் துடித்துக் கொண்டுள்ளாள்!!

இந்த இரண்டடிகளைக் கேட்ட அவர்களின் பரவசம் எல்லையைக் கடந்தது. அவர்கள் அறியாமலேயே, அவர்களின் கால்கள், அவர்களை அந்தப் பாட்டு வரும் திசையை நோக்கி இழுத்துச் சென்றன.

எதிரே அருளே உருவெடுத்தாற்போன்று ஒரு பெரியார் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து, அன்போடு

அவர்களைத் தம் தோட்டத்திற்கு அழைத்து வந்து அமரச் செய்து, அவர்களின் முன் ஒரு கொடி முந்திரிப் பழக் குலையைக் கொண்டு வந்து வைத்து, ''உண்ணுக! உண்ணுக!!'' என்று வேண்டி நின்றார்கள் இளவல்.

அப் பழங்களைச் சுவைத்து உண்ட அப்பெரியார், அவ் இளவல் செய்த நன்றிக்குப் பிரதி செய்யும் முறையில், தம்முடைய துணியில் முடிந்து வைத்திருந்த எள் உருண்டையை எடுத்துக் கடித்து, அதில் ஒரு பகுதியை அவர்களிடம் கொடுத்து உண்ணுமாறு கூறினர். அவ்வாறே அவர்களும் செய்தனர். என்ன வியப்பு! அவர்களின் உள்ளத்திலே மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. அடுத்த கணம் அவர்கள் ஒரு புதுவித மனிதராக மாறி விட்டார்கள். இவ்வாறு அவர்களின் வாழ்விலே ஒரு மாபெரும் மாறுதலைச் செய்த அப்பெரியார் யார்? அவர்களே இப்ராஹீம் கந்தோஸி என்ற இறைநேசச் செல்வராவர்.

இதன்பின் அவர்களால் ஒருநிலைக் கொள்ள இயலவில்லை. தமக்கு உரிமையாக இருந்த பழத்தோட்டத்தை விற்று, அந்தப் பணத்தை ஏழை, எளியவர்களுக்கு அறம் செய்து விட்டு, ஊரை விட்டே கிளம்பி விட்டார்கள். எங்கே? ஸமர்க்கந்த், புகாரா ஆகிய நகரங்களை நோக்கி. ஏன்? கல்வி தேடி.

அக் காலத்தில் ஸமர்க்கந்த், புகாரா ஆகிய நகரங்களே கல்வியின் இருப்பிடமாக இருந்தன. அவ் இரு நகரங்களிலும், அவர்கள் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் தங்கி, மௌலானா ஹிஸ்ஸாமுத்தீனிடமும், ஷைகுல் இஸ்லாம் மௌலானா ஷர்ஃபுத்தீனிடமும் மார்க்கக் கல்விகளை ஐயம் திரிபறக் கற்றார்கள். பின்னர் அவர்களின் பாதங்கள், 'அருள் பெற்ற பகுதாதில் வாழும் எங்கள் அருமை முஹ்யித்தீன் திருப்பாதங்களை' நோக்கி அவர்களை இழுத்துச் சென்றன.

அப்பொழுது கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் புகழ் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தது. அவர்களைத் தரிசித்து, அவர்களின் ஆசியைப் பெறுவதற்காக மக்கள் உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் பக்தாதுக்கு வந்து குழுமிக் கொண்டிருந்தார்கள். அக் குழுவிலே முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும் ஒருவராக வந்து நின்று கொண்டிருந்தார்கள்.

கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள், முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களுக்குத் தாய்வழியில் ஒன்றுவிட்ட மாமாவாக இருந்தார்கள். தம் முன் வந்து நின்று கொண்டிருந்த தம் அருமை மருகரைக் கண்டதும், கௌதுல் அஃலம் அவர்களின் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது. அவர்களை அன்போடு உபசரித்துத் தம் அருகே அமரச் செய்து, தம்மைச் சூழ வீற்றிருந்த தம்



சீடர்களை நோக்கி, ''இந்த இளவல், தம் காலத்தில் மாபெரும் மகானாக விளங்குவார். இவர் இலட்சோப லட்சம் மக்களுக்கு அறிவின் ஊற்றாகவும், அன்பின் இலக்காகவும், பக்தியின் கேந்திரமாகவும் திகழ்வார்'' என்று முன்னறிவிப்புச் செய்தார்கள்.

பின்னர் கௌதுல் அஃலம் அவர்களிடம் விடைபெற்று ஹாரூன் என்ற ஊரை அடைந்த அவர்கள், அங்கு வாழ்ந்து வந்த ஷைகு உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களைச் சந்திக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்றனர். அவர்களின் முன் சென்று, பெரிதும் மரியாதையுடன், தமக்குத் தீட்சை தந்து ஆட்கொள்ள வேண்டிக் கொண்டனர். அவர்களும் அவர்களை எதிர்பார்த்திருந்தவர்கள் போன்று, அவர்களை அன்புடன் ஆரத்தழுவி அமரச் செய்து, அவர்களைப் பல்வேறு வணக்கங்களில் ஈடுபடுத்திப் புடம் போட்டபின், அவர்களுக்கு சிஷ்திய்யா தரீக்காவில் தீட்சை வழங்கினர்.

தம் குருவுடன் இரண்டரை ஆண்டுகள் தங்கியிருந்தபின், தம் குருவின் ஆணையின்படி பயணத்தை மேற்கொண்ட காஜா அவர்கள், பக்தாது வந்து, கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களை இரண்டாவது முறை சந்தித்தனர். இப்பொழுது அவர்கள் அங்கு வாழ்ந்து வந்த ஷைகு அபூநஜீப் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களையும் சந்தித்து, அவர்களின் ஆசியைப் பெற்றனர்.

இதன்பின் சிரியா நோக்கிப் புறப்பட்ட அவர்கள், வழியில் இருந்த குகை ஒன்றில், உஹத் மஹ்மூது அல் வாஹித் என்ற இறைநேசச் செல்வரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர். மிகவும் மெலிந்து காணப் பட்ட அவர், ஒரு தொழுகை விரிப்பின் மீது அமர்ந்திருந்தார். இரண்டு சிம்மங்கள் அவரின் முன் நின்று கொண்டிருந்தன. அவற்றைக் கண்டு பயந்த அவர்கள், அவரின் அருகே செல்லாது தயங்கி நின்று கொண்டிருந் தார்கள். அப்பொழுது அவர், அவர்களை நோக்கி, ''பயப்படாது என் அருகே வாரும். நீர் எவருக்கும் தீமை இழைக்க எண்ணாவிடின், எவரும் உமக்குத் தீமை இழைக்க மாட்டார்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்ற வனுக்கு, அகில உலகமும் அஞ்சும்'' என்று கூறினார்.

அதன்பின் அவர்கள் அவரின் அருகே சென்றனர். அப்பொழுது அவர், அவர்களை நோக்கி, ''எங்கிருந்து வருகிறீர்?'' என்று வினவினர். பக்தாதிலிருந்து என்று பதில் மொழிந்தார்கள் அவர்கள்.

''நல்லது; நான் இக் குகைக்கு வந்து முப்பது ஆண்டுகளாகின்றன. நான் இந்த முப்பது ஆண்டுகளாக, இக்குகையில்தான் அமர்ந்து, ஒன்றை நினைத்துக் கண்ணீர் வடித்த வண்ணமுள்ளேன்'' என்றார் அவர்.

''என்ன அது?'' என்று ஏக்கத்துடன் வினவினார்கள் அவர்கள்.

''தொழுகை'' என்று கூறிய அவர், ''நான் தொழும் தொழுகைகளை இறைவன் ஏற்றுக் கொள்வானா, மாட்டானா என்ற ஐயமும், அச்சமுமே என்னை இவ்வாறு அழுது கண்ணீர் வடிக்கச் செய்து கொண்டுள்ளது. தொழுகையில் ஒரு சிறு தவறு ஏற்பட்டால் கூட, அது பயனற்றதாகி விடுமே'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டார் அவர்.

பின்னர் அவர், அவர்களை நோக்கி, ''தர்வேஷ்! நீர் தொழுகையைத் தவறின்றி ஒழுங்காகத் தொழுது வாரும். அவ்விதம் தொழுதுவரின், நீர் மகத்தான சாதனையைப் புரிந்தவராவீர். இல்லையெனில் நீர் உம்முடைய வாழ்க்கையைப் பொடு போக்கிலும், துன்பத்திலும் கழித்தவராவீர்'' என்று கூறினார்.

வேறொரு தடவை அவர்கள் பிறிதொரு குகையில், மற்றொரு தர்வேஷைச் சந்தித்தனர். அவரோ இறைத்தியானத்தில் மூழ்கித் தம்மை மறந்த நிலையில் இருந்தார். மேற்கொண்டும் நடந்தவற்றை, இதோ காஜா அவர்களே கூறுகின்றார்கள். நாமும் கேட்போம்.

''அவரை நான் நெருங்கி, அவருக்கு மரியாதையுடன் 'ஸலாம்' உரைத்தேன். அவர் மிகவும் மெலிந்து ஒல்லியாகக் காணப்பட்டார். சிறிதளவே பேசினார். அவர் மிகவும் மெலிந்திருப்பதற்கான காரணத்தை அவரிடம் வினவ எண்ணினேன். இதனைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட அவர், ''தர்வேஷ்! நான் ஒருநாள் சில நண்பர்களுடன் ஓர் அடக்கவிட வளாகத்தின் வழியே நடந்து சென்றேன். அப்பொழுது நான் ஓர் அடக்கவிடத்தின் அருகில் போய் அமர்ந்தேன். நாங்கள் அனைவரும் கேலி, விளையாட்டுகளில் ஈடுபட்டுப் பெரிதும் சப்தமிட்டுச் சிரித்து மகிழ்ந்தோம். அப்பெழுது திடீரென ஓர் அடக்கவிடத்திலிருந்து, ''உறங்குகின்றவர்களே! நீங்கள் இறுதியாகப் புதை குழிகளை அடைபவர்களாக இருக்க, உங்களின் எதிரியாக உயிர் வாங்கும் வானவர் இருக்க, புதைகுழிகளில் உங்களின் சகாக்களாகத் தேள்களும் பாம்புகளும் இருக்க, உங்களால் எவ்வாறு சிரித்து மகிழ முடிகிறது?'' என்று ஒரு குரல் முழங்கியது.

''இதனைச் செவியுற்றதும், நான் உடனே எழுந்து என் நண்பர்களின் கைகளை முத்தமிட்டு, அவர்களிடமிருந்து விடை பெற்றுப் பிரிந்தேன்.

''அதன்பின் இக் குகைக்கு வந்து, இங்கேயே தங்கியுள்ளேன். அப்பொழுது ஏற்பட்ட திடுக்கம், என் உள்ளத்தை இன்று வரைக் கௌவிப் பிடித்துள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை நான் வானத்தை அண்ணாந்து பார்க்கவில்லை'' என்று கூறினார்.



அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, தப்ரேஸ் சென்ற அவர்கள் ஜலாலுத்தீன் தப்ரேஸ் (ரஹ்) அவர்களின் ஆன்மீக ஆசானாகிய காஜா அபூ ஸயீது தப்ரேஸ் (ரஹ்) அவர்களைச் சந்திக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்றனர். அவர்களுக்கு ஜலாலுத்தீன் தப்ரேஸ் (ரஹ்) அவர்களைப் போன்ற எழுபது மாணவர்கள் ஊழியம் புரிந்து வந்தனர்.

தப்ரேஸிலிருந்து அஸ்தராபாத் சென்ற காஜா அவர்கள், அங்கு வாழ்ந்து வந்த மாபெரும் இறைநேசச் செல்வரான ஷைகு நஸீருத்தீன் (ரஹ்) அவர்களைச் சந்தித்து அளவளாவினர். அப்பொழுது அவர்களுக்கு வயது ஒரு நூற்று எழுபது. தாம் அபூஸயீத் அபுல் கைர் (ரஹ்) அவர்களுடனும், ஷைகு அபுல் ஹஸன் ஹர்க்கானி (ரஹ்) அவர்களுடனும் தொடர்பு கொண்டிருந்ததைப் பெருமிதத்துடன் எடுத்துரைத்தார்கள்.

அங்கிருந்து புகாரா சென்ற அவர்கள், அங்கு இரு கண்களும் பார்வை இழந்த ஒரு தர்வேஷைச் சந்தித்தனர். அவர் பெரிதும் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். காஜா அவர்கள் அவரை அணுகி, ''தங்களின் இரு கண்களும் எப்பொழுது ஒளி இழந்தன?'' என்று வினவினர். அதற்கு அவர், ''நான் ஆன்மீக உச்சத்தை எய்தப் பெற்று, அல்லாஹ்வின் அளப்பரும் மாண்பினை மட்டும் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் பொழுது, திடீரென என் பார்வை வேறு பக்கல் திரும்பியது. அப்பொழுது ''என் மீது மட்டுமே காதல் கொண்டிருப்பதாகக் கூறித் திரிபவனே! என்னையன்றி வேறொன்றின் மீது இப்பொழுது உன் பார்வை பாய்ந்த காரணம் என்ன?'' என்று ஓர் அசரீரி முழங்கியது.

அதனைச் செவியுற்றதும் நான் பெரிதும் நாணமுற்று, 'இறைவ! எம்பெரும! நான் தவறிழைத்துவிட்டேன். உன்னைத் தவிர்த்து வேறொன்றின் மீது நான் கவனம் செலுத்தியதற்காக என் கண்கள் இரண்டையும் குருடாக்கிவிடு' என்று அலறினேன். அடுத்த கணம் என் கண்கள் இரண்டும் குருடாயின'' என்று அவர் பதிலிறுத்தார்.

அங்கிருந்து கிளம்பிய அவர்கள் ஹர்க்கானில் அபுல் ஹஸன் ஹர்க்கானி (ரஹ்) அவர்களுடையவும், மம்னாவில் அபூ ஸயீது அபுல் கைர் (ரஹ்) அவர்களுடையவும், ஹிராத்தில் ஷைகு அப்துல்லாஹ் அன்ஸாரி (ரஹ்) அவர்களுடையவும் அடக்க இடங்களையெல்லாம் தரிசித்தனர். அப்துல்லாஹ் அன்ஸாரி (ரஹ்) அவர்களுடைய அடக்க இடத்தில், அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து, இராத் தொழுகைக்குச் செய்த 'உளூ'வுடன்' வைகறைத் தொழுகையையும் தொழுதார்கள்.

அவர்கள் ஸமர்க்கந்த் சென்ற பொழுது, ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கு அபுல் லைஸ் ஸமர்க்ந்தியின் இல்லத்தின் அருகிலிருந்த பள்ளி

வாசலின் வளைவு 'கிப்லா'வை நோக்கி இல்லை என்று ஒருவர் குறை கூறினார். காஜா அவர்கள் தம் உள்ளுணர்வால் அதுசரியாக இருப்பதை அறிந்து அவரைச் சமாதானப்படுத்தினார்கள்.

ஹிஜ்ரி 561 ஆம் ஆண்டு, முஹர்ரம் மாதம், பத்தாம் நாள் (கி.பி. 11-11-1165) அவர்கள் இந்தியாவிலுள்ள மூல்த்தானுக்கு முதன் முதலாக வந்து சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் ஒரு தர்வேஷைச் சந்தித்தனர். அவர், ''தௌபா' மூன்று வகைப்படும். அவை : 1) பாவம் செய்ய வெட்கப் படுவது. 2) செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கோருவது. 3) சினத் திலிருந்தும், கொடுமையிலிருந்தும், தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வது'' என்று காஜா அவர்களிடம் கூறினார்.

மூல்த்தானிலிருந்து அவர்கள் லாகூர் சென்றனர். அங்கு பஹ்ராம் ஷாவின் பேரன் குஸ்ரூ மாலிக் அரசாண்டு கொண்டிருந்தார். லாகூரில் அவர்கள் ஹுஜ்வீரீ (ரஹ்) அவர்களின் அடக்க இடத்தில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார்கள்.

அங்கிருந்து பக்தாது திரும்பிய அவர்கள், வழியில் சஞ்சான் என்ற ஊரில் வாழ்ந்து வந்த, ஷைகு நஜ்முத்தீன் குப்ரா (ரஹ்) அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் இரண்டரை ஆண்டுகள் தங்கியிருந்தனர்.

இதன்பின், தம் ஆன்மீக ஆசானாகிய உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களைச் சந்திப்பதற்காக அவர்கள் வந்த பொழுது, 'ரே'யில் வைத்து இருவரும் ஒருங்கு சேர்ந்து, பக்தாது வந்து, அங்கு சில மாதங்கள் தங்கியிருந்தபின், ஹிஜ்ரி 562 ஆம் ஆண்டில் 'ஹஜ்'ஜு செய்வதற்காக மக்கா புறப்பட்டனர்.

வழியில் அவர்கள் பல பெரியார்களைச் சந்தித்து அளவளாவி, ஆசிபெற்று மக்கா சென்று 'ஹஜ்'ஜுச் செய்து விட்டு மதீனா சென்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்தனர். பின்னர் அவர்கள் இருபது ஆண்டுகளாகப் பற்பல நாடு நகரங்களிலும் சுற்றித் திரிந்து, பக்தாது மீண்டார்கள். அங்கு வைத்து, காஜா அவர்களுக்கு 'கிலாஃபத்' வழங்கிய உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், ''முயீனுத்தீனே! நான் உம்மை இறைவனளவில் ஒப்படைத்து விட்டேன். 'ஹாதா பிராக்கு பைனீ வ பைனிக்' (இது எனக்கும் உமக்கும் இடையிலுள்ள பிரிவாயிருக்கும்)'' என்று கூறி, அவர்களின் நெற்றியிலும் கண்களிலும் முத்தமிட்டனர்.

பின்னர், மீண்டும் அவர்களை நோக்கி, ''உம்மைப் பிரிவது எவருக்கு இன்பம் தரும்?'' என்ற கருத்தமைந்த பார்ஸிக் கவியைக் கூறி, 'இறை ஆணைப்படியும், எம் பெருமானார் (ஸல்)' அவர்களின் உத்தரவின் படியும், என்னிடமிருந்த 'தவுலத்துல் குப்ரா' என்ற மிகப்பெரும் பாக்கியத்தை, நான்



உமக்கு நன்கொடையாக வழங்கிவிட்டேன். இன்று முதல் என்னுடைய கலீபாவாக உம்மை நியமித்து, சிஷ்திய்யா தரீக்காக்காரர்களுக்கு உம்மை ஷைகாகவும் ஆக்கியுள்ளேன். நீர் என்னை விட்டுப் புறப்பட்டுச் செல்லலாம். நான் உம்மை இறைவனளவில் ஒப்படைத்து விட்டேன்'' என்று கூறி விடை பெற்றார்கள் உதுமான் ஹாரூனி (ரஹ்).

தம் ஐம்பத்திரண்டாவது வயதில் சிஷ்திய்யா தரீக்காவின் 'கிலாஃபத்' பதவியைப் பெற்ற காஜா முயினுத்தீன் சிஷ்தி (ரஹ் ) அவர்கள், இதன்பின் சில நாட்கள் பக்தாதில் தங்கியிருந்தனர். முன்னர், அவர்கள் ஊஷ் என்ற ஊர் சென்றிருந்த பொழுது, அங்கு குத்புத்தீன் பக்தியார் என்ற சிறுவரைச் சந்தித்திருந்தனர். அவருக்குப் பதினாறு வயதான இப்பொழுது, அவர் தம் அன்னையின் அனுமதி பெற்று, ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்து, காஜா அவர்களை பக்தாதில் சந்தித்து, அவர்களின் கரம் பிடித்துத் தீட்சை பெற்றார்.

இதன்பின் குருவும் சீடரும், மக்கமா நகர் நோக்கிப் புறப்பட்டார்கள். ஒரு நாள் அவர்கள் வைகறைத் தொழுகையைத் தொழுதபின், ஓர் ஊரினை அடைந்தனர். அங்குள்ள குகை ஒன்றில் 'ஒடியற் கிழங்கு' போன்று முள்ளும் தோலுமாக ஒருவர், தம் கண்களை வியப்பால் அகல விரித்தது போன்று நின்று கொண்டிருந்தார். அக்குகையில் அவர்கள் ஒருமாத காலம் வரை தங்கியிருந்தார்கள். இந்த ஒரு மாத காலத்தில், அவர் ஒரே ஒரு தடவை தான் தன்னுணர்வு பெற்றார். அப்பொழுது அவர்கள் இருவரும், அவரின் முன் எழுந்து நின்று அவருக்கு மரியாதையுடன் 'ஸலாம்' உரைத்தார்கள்.

ஸலாத்திற்கு பதில் உரைத்த அவர், அவர்களை நோக்கி, ''என் அன்பிற்குரியவர்களே! என் நிலையைப் பார்த்து நீங்கள் வருத்த முற்றிருக்கலாம். இந்த வருத்தம் உங்களுக்கு நற்பலனை நல்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், தர்வேஷ்களுக்கு ஊழியம் புரிவோர், அதற்கான பலனை எய்தப் பெறாதிருப்பதில்லை'' என்று கூறிவிட்டு, அவர்கள் இருவரையும் அமருமாறு பணித்தார் அவர். அவ்வாறே அவர்கள் இருவரும் அமர்ந்தனர்.

அதன்பின் அவர், அவர்கள் இருவரையும் நோக்கி, ''நான் ஷைகு முஹம்மது அஸ்லம் தூஸியுடைய மகனாவேன். சென்ற முப்பது ஆண்டு களாக, இரவு பகல் யாதெனத் தெரியாது, தன்னுணர்வற்று தியானத்தில் மூழ்கியுள்ளேன். இன்று தான் இறைவன் என்னைத் தன்னுணர்வு பெறச் செய்தான். உங்களுக்காக வேண்டித்தான், இறைவன் இன்று என்னைத் தன்னுணர்வு பெறச் செய்தான் என்று எண்ணுகிறேன். மறுமுறை நீங்கள் இங்கு வர இயலாது போய்விடும். ஆதலின், நான் இப்பொழுது கூறுவதை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆன்மீகப்

பாதையில் நீங்கள் அடியெடுத்து வைத்தபின், மீண்டும் நீங்கள் உலகாயத விஷயங்களில் கவனம் செலுத்துவது, உங்களின் தகுதிக்கு ஒவ்வாத தாகும். மனித சகவாசத்தை விட்டும் வெருண்டோடுங்கள். உங்களுக்குக் கிடைப்பவற்றைச் செலவழித்து விடுங்கள். அவற்றில் சிறிதையேனும் சேமித்து வைக்க வேண்டாம். ஏனெனில், சேமிப்பது என்பது, அழிவை விலைக்கு வாங்கிக் கொள்வதாகும். துன்பத்தையும், அவமானத்தையும் விட்டு நீங்கள், உங்களைக் காத்துக் கொள்ளவிரும்பின், இறைவனின் உண்மையான பக்தர்களாகி விடுங்கள்'' என்று கூறினார். அடுத்த கணம் அவர் மீண்டும் தன்னுணர்வற்ற நிலையிலானார்.

அவரை விட்டுப் பிரிந்து, பற்பல ஊர்களையும் கடந்து செல்லும் பொழுது, ஒரு குகையில், ஒரு துறவி இருந்து தவம் செய்து வருவதாகக் கேள்வியுற்ற குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்கள், அதனைத் தம் ஆசானிடம் கூறினர். உடனே காஜா அவர்கள், இரண்டு ரொட்டிகளை அவர்களிடம் கொடுத்து, அவற்றை எடுத்துச் சென்று அவரிடம் கொடுத்துத் தம் ஸலாத்தையும் கூறுமாறு பணித்தனர். அவ்விதமே அவர்கள் செய்ய, அத் துறவி அவற்றைப் பெற்றுக் கொண்டு, ஒன்றைத் தாம் வைத்துக் கொண்டு, மற்றொன்றை அவர்களுக்குக் கொடுத்தார். இருவரும் அவற்றைக் கொண்டு நோன்பு திறந்தனர்.

பின்னர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், அவரிடமிருந்து விடைபெற்ற பொழுது, அவர்களிடம் அவர் நான்கு பேரீத்தம் பழங்களைக் கொடுத்து, அவற்றைக் காஜாவிடம் கொடுக்குமாறும், தம் ஸலாத்தையும் அவர் களுக்குக் கூறுமாறும் சொன்னார். அவ்விதமே அவர்கள் செய்ய, அவற்றைப் பெற்றுக் கொண்ட காஜா அவர்கள், ''ஒரு வலியின் ஆணை நபிபெருமானின் ஆணைக்கு நிகரானது. அதனை நிறைவேற்றுவது உம்மீது கடமையாகும்'' என்று கூறினர்.

இறுதியாக அவர்கள் மக்கா வந்து சேர்ந்தனர். ஒரு நாள் காஜா அவர்கள், கஃபாவின் முன் அமர்ந்து இறைவனை வழுத்தி ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ''முயீனுத்தீனே! உம் வணக்கம் கண்டு மகிழ்ந்தோம். உமக்கு மறுமையில் சுவனப் பெரு வாழ்வை வழங்குவோம். நீர் விரும்பியதைக் கேளும். தருகிறேன்'' என்று அசரீரி முழங்கியது.

அதற்கு அவர்கள் ''இறைவ! எம்பெரும! என்னைப் பின்பற்றுபவர் களுக்கும் அப் பேற்றினை வழங்குவாயாக!'' என்று இறைஞ்சினர்.

உடனே பதில் வந்தது: 'முயீனுத்தீனே! உம்மைப் பின்பற்றியவர் களுக்கும், உம் தரீக்காவில் நுழைந்தவர்களுக்கும், நாம் அப் பேற்றினை வழங்குவோம்'' என்று.



இறைவனின் இப் பதிலைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியுற்ற காஜா அவர்கள், ஹஜ்ஜுக் கடமைகளையெல்லாம் இனிதே நிறைவேற்றிய பின், மதீனா சென்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்த பொழுது தான், நாம் துவக்கத்தில் கூறிய சம்பவம் நிகழ்ந்தது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆணையேற்று, அவர்கள் அஜ்மீர் செல்லும் வழியில், பக்தாது வந்து சேர்ந்தார்கள். அங்கு உள்ள ஒரு மடத்தில், இறை காதலில் மூழ்கிய ஒருவர் வீற்றிருந்தார். அவரின் உடலின் மீது நூறு தடவை சவுக்கால் ஓங்கி, ஓங்கி அடிக்கப்பட்டது. ஆனால் அவரோ, அதனைச் சிறிதேனும் பொருட்படுத்தாது அமைதியாக வீற்றிருந்தார்.

அப்பொழுது ஒருவர் அவரை நோக்கி, ''என்ன! இத்தனை அடிகள் உம்மீது ஓங்கி, ஓங்கி அடிக்கப்பட்ட போதினும், அவற்றை அணுவத் தனையும் பொருட்படுத்தாது அமர்ந்திருக்கிறீரே'' என்று வியப்புடன் வினவினார்.

அதற்கு அவர், ''என் காதலன், என் முன் வீற்றிருக்கும் பொழுது, எனக்கு வேறு யாதொன்றும் தெரியாது போய் விடுகிறது. நான் அவனுடைய பேரழகில் மூழ்கித் திளைத்துத் தன்னுணர்வற்றிருக்கிறேன்'' என்று பதில் மொழிந்தார்.

வேறொரு நாள் அவர்கள், ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ, காஜா அஜல்லு ஷீராஜி ஆகிய பெரியார்களுடன் வீற்றிருக்கும் பொழுது, 'மெய்யன்பு என்றால் என்ன' என்பது பற்றி விவாதம் நிகழ்ந்தது. ஒவ்வொருவரும், தம் தம் கருத்தை எடுத்துரைத்தனர். அப்பொழுது காஜா அவர்கள், ''அடியான் அழைக்காமலே, இறைவன் அடியானின் விருப்பத்தை நிறைவேற்றித் தரும் அளவுக்கு, அடியான் இறைவன் மீது அன்பு கொள்வதே மெய்யன்பு'' என்று கூறினர். இதனை அனைவரும் ஒப்பினர்.

மற்றொரு நாள், அவர்கள் பக்தாதில் திஜ்லா நதி ஓரமாக நடந்து சென்ற பொழுது ஒரு குடிலில் பெரியார் ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவருக்கு 'ஸலாம் கூறினார்கள். அவர் சைக்கினையால் அதற்குப் பதில் சொல்லிவிட்டு, அமருமாறு சாடை செய்தார். அவ்விதமே அவர்கள் அமர்ந்தனர். பின்னர் சற்றுநேரம் கழித்து அவர், அவர்களை ஏறிட்டுப் பார்த்து, ''நானும் உம்மைப் போன்று ஒரு காலத்தில் ஊர் சுற்றி அலைந்து கொண்டுதான் இருந்தேன். ஒருநாள் நான் ஓர் ஊரின் கடை வீதி வழியே நடந்து சென்றபொழுது, அங்கு ஒரு செல்வர் தம் ஊழியர்

களை வாயில் வந்த வண்ணம் ஏசி, வேலை வாங்கிக் கொண்டிருந்தார். அவர் ஊழியர்களைப் படுத்திய கொடுமையோ சொல்லும் தரத்ததா யில்லை. நான் யாதும் கூறாது, அவ் இடத்தைவிட்டும் அகன்றேன். அப்பொழுது அசரீரி ஒன்று, ''நீர் அம் மனிதனின் அக்கிரமச் செயலைக் கண்டித்து ஒரு வார்த்தையேனும் கூறாது அவ் இடத்தைவிட்டு அகன்றுவிட்டீரே. கூறி இருப்பின், அவன் ஒரு வேளை திருந்தி இருக்கலாமல்லவா? ஊழியர்களின் துன்பமும் தவிர்க்கப்பட்டிருக்கு மல்லவா?'' என்று முழங்கியதைச் செவியுற்றேன். அதிலிருந்து நான் இங்கு வந்து அமர்ந்தவன் தான். பின்னர் நான் வெளியே அடியெடுத்தும் வைக்கவில்லை. நியாயத் தீர்ப்பு நாளின்போது இறைவன் என்னிடம் இது பற்றி வினவின், யாது கூறுவதென அறியாது விழித்துக் கொண்டுள் ளேன்'' என்று கூறினார்.

பிறிதொரு நாள் அவர்கள், ஷைகு உஹதுத்தீன் (ரஹ்), ஷைகு ஷஹாபுத்தீன் உமர் சுஹ்ரவர்தீ (ரஹ்), குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) ஆகியோருடன் ஓரிடத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அவ்வழியே பன்னிரண்டு வயதுள்ள ஒரு துருக்கிய அடிமைச் சிறுவன் கையில், அம்பும் வில்லும் ஏந்திச் சென்றதைக் கண்டதும், ''இவன் ஒரு காலத்தில் டில்லி அரியணை மீது வீற்றிருப்பான்'' என்று முன்னறிவிப்புச் செய்தனர்.

பின்னர் காஜா அவர்கள், தம் சீடர் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களுடன் பக்தாது விட்டு நீங்கி, சிஷ்த், ஹிராத் ஆகிய ஊர்களை எல்லாம் கடந்து ஆப்கானிஸ்தானிலுள்ள ஸப்ஸவார் என்ற ஊர் வந்து சேர்ந்தார்கள். இவ் ஊரின் அதிபதியாக முஹம்மது யாத்கார் என்ற ஷீயா ஒருவர் இருந்து வந்தார். கொடுமையே உருவெடுத்தாற் போன்ற அவர், சுன்னத்-வல்-ஜமாஅத்தைச் சேர்ந்த முஸ்லிம்களைப் பெரிதும் துன்புறுத்தினார். அபூபக்கர், உமர் என்னும் பெயருள்ளவர்களை எல்லாம் அவர் தம் பரம விரோதிகளெனக் கருதிப் படுத்திய பாடோ சொல்லும் தரத்ததாயில்லை.

அவருக்கு, ஊருக்கு வெளியே ஒரு பூம்பொழில் இருந்தது. அதன் நடுவே ஒரு நீர்ச் சுனையும் இருந்தது. மாலை நேரத்தை உல்லாசமாகக் கழிக்க, அவர் அங்கு வருவது வழக்கம். அப் பூம்பொழிலில் காஜா அவர்கள் நுழைந்து, அங்கிருந்த சுனையில் 'உளூ'ச் செய்து தொழுது விட்டு, அமைதியாக வீற்றிருந்து திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அப்பூம்பொழில் காவலன், காஜா அவர்களிடம் ஓடோடி வந்து ''எசமானர் வருகின்றார். இங்கிருந்து எழுந்து செல்லுங்கள்'' என்று பதற்றத்துடன் கூறினான்.



அதுகேட்ட காஜா அவர்கள், அவனை நோக்கி, ''ஏன் இவ்வளவு பதறுகிறாய்? அமைதியாக இரு. அதோ நிற்கும் மரத்தின் பின்னால் அமர்ந்து, என்ன நிகழ்கிறது, எம் இறைவன் என்ன செய்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டிரு'' என்று கூறினர்.

அதற்குள் அதிபதியின் ஊழியர்கள் அங்கு விரைந்து வந்து, அந்த நீர்ச் சுனையின் அருகே தம் எசமானர் அமர்வதற்கான இரத்தினக் கம்பளத்தை விரித்தார்கள். காஜா அவர்கள் அங்கு அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், அவர்களை அவ் இடத்தை விட்டும் எழுந்து செல்லுமாறு கூற அவர்களுக்கு ஏனோ துணிவேற்படவில்லை.

முஹம்மது யாத்கார் அங்கு வந்ததும், தாம் அமரவிருக்கும் இடத்திற்கு அருகே காஜா அவர்களும், அவர்களின் சீடரும் அமர்ந்திருப்பதைக் கண்டு கடும் சினமுற்று, 'இந்தப் பக்கீர்களையெல்லாம் ஏன் இங்கு நுழைய விட்டீர்கள்?' என்று தம் ஊழியர்களை நோக்கி சொற்களை வீசினார். இதனைச் செவியுற்ற காஜா அவர்கள், அவரை ஏறிட்டுப் பார்த்தார்கள். அடுத்த கணம் அவரின் உள்ளமும் உடலும், ஒருங்கு சேர்ந்து அதிர்ந்தன. அதிர்ச்சி தாள இயலாது அவர், மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார்.

இது கண்டு திடுக்குற்ற அவரின் ஊழியர்கள், காஜா அவர்களின் காலில் விழுந்து, தம் எசமானரின் உயிரைக் காத்தருளுமாறு வேண்ட; அவர்கள், அவர்களில் ஒருவனை நீர்ச் சுனையிலிருந்து தண்ணீர் கொண்டு வருமாறு பணித்தனர். அவ்விதமே அவன் கொண்டு வந்ததும், அதில் அவர்கள் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்று ஓதி ஊதி, அதனை அவரின் முகத்தில் தெளித்தனர். மறுகணம் அவர் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்.

அதன்பின் அவர் காஜா அவர்களின் கால்களைப் பிடித்துக் கொண்டு தம்மை மன்னித்து ஆட்கொள்ளுமாறு, அழுத கண்களுடன் வேண்ட, காஜா அவர்களும் அவரைப் பெருமனத்துடன் மன்னித்து அறிவுரை பகர்ந்தார்கள். பின்னர் காஜா அவர்களின் கரம் பிடித்து 'பைஅத்' பெற்று, அவர்களின் ஆன்மீக மாணவரான அவர், தம் உடைமைகள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து, அதனை காஜா அவர்களிடம் கொடுத்து, அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அவரின் வேண்டுகோளை நிராகரித்த காஜா அவர்கள், அவரை நோக்கி, ''நீர் எவரிடமிருந்து அநியாயமாக எந்த உடைமைகளைக் கபளீகரம் செய்தீரோ, அவற்றை அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிடும். ஏனையவற்றை விற்று ஏழைகளுக்கு அறம் வழங்கிவிடும்'' என்று கூறினர். அவ்வாறே செய்த அவர், சின்னாட்களுக்குப்பின் காஜா அவர்கள் அவ் ஊரை விட்டுக் கிளம்பியபொழுது, அவர்களோடு சேர்ந்து கிளம்பிவிட்டார்.

விரைவில் அவர்கள் மூவரும், ஷத்மான் கோட்டையை அடைந்தார்கள். இப்பொழுது முஹம்மது யாத்கார் தம் ஆசை, அகந்தையெல்லாம் ஒழியப் பெற்று, புதியவராக, புனிதராக ஆனது கண்டு மகிழ்ந்த காஜா அவர்கள், அவரை, அப்பகுதிகளுக்கெல்லாம் அதிபதியாக இருந்து ஆட்சி செய்யுமாறு பணித்து விட்டு, இந்தியாவை நோக்கி அடிபெயர்ந்தார்கள்.

வழியில் பல்க் என்ற ஊரை அடைந்த அவர்கள், அங்குள்ள ஷைகு அஹ்மது கஸ்ரவி (ரஹ்) அவர்களின் தவமடத்தில் தங்கியிருந்தனர். அங்கு ஹக்கீம் ஜியாவுத்தீன் என்ற தத்துவஞானி வாழ்ந்து வந்தார். அவர் சூஃபிகளைக் கேலி செய்ததுடன், தாம் படித்த கிரேக்க தத்துவ ஞானத்தை மக்களிடம் பரப்புவதற்காக, ஊருக்கு வெளியிலுள்ள ஒரு பூங்காவில், ஒரு கல்லூரியையும் நிறுவி இருந்தார்.

ஒரு நாள் காஜா அவர்கள் தம் சீடரையும் அழைத்துக் கொண்டு, வேட்டையாட வெளியே சென்றனர். அப் பூங்காவில் நின்ற ஒரு மரத்தில் அமர்ந்திருந்த கொக்கு ஒன்றை அவர்கள் அம்பால் எய்ய, அது கீழே விழுந்தது. அதனை அறுத்துத் தம்மிடமிருந்த சக்கிமுக்கிக் கல்லால் தீ உண்டாக்கி, அத்தீயில் அதனைச் சுடுமாறு தம் சீடரிடம் கூறிவிட்டு, அங்கு ஓரிடத்தில் அமர்ந்திருந்தனர்.

அப்பொழுது அங்கு வந்த ஹக்கீம் ஜியாவுத்தீன், அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து, அவர்களை எவரென விசாரித்தார். பின்னர் இருவரும் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சீடர் தாம் தீயில் வேக வைத்த பறவையை அவர்களின் முன் கொண்டு வந்து வைக்க, அதில் ஒரு துண்டைப் பிய்த்து, அவர்கள் ஹக்கீம் சாஹிபிடம் கொடுத்தார்கள். அதனை உண்ட அடுத்த கணம், அவரின் உள்ளத்திலே மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. தாம் இதுகாறும் உண்மையென எண்ணி வந்ததெல்லாம் தவறு என்றும் சூஃபிகளின் அடிச்சுவடே பின்பற்றத் தகுந்த நேர்வழி என்றும், அவர் உணர்ந்தார். உணர்ந்த அடுத்த கணமே அவர் காஜா அவர்களின் கரம் பிடித்து, 'பைஅத்' செய்தார். அதன் பின் அவரின் மாணவர்களும் வந்து, அவ் விதமே 'பைஅத்' செய்து நேர்வழி பெற்றார்கள்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கஜ்னீ வந்து சேர்ந்த அவர்கள், அங்கு வாழ்ந்து வந்த இறைநேசச் செல்வர் ஷைகு அப்துல் வாஹித் (ரஹ்) அவர்களின் தவமடம் சென்று, அவர்களைத் தரிசித்தார்கள். அவர்களிடம் விடைபெற்று, லாகூர் வந்து சேர்ந்த காஜா அவர்கள் அங்குள்ள தாதா கன்ஞ் பக்ஷ் ஹுஜ்வீரி (ரஹ்) அவர்களின் அடக்க இடத்தில் பல நாட்கள் 'கல்வத்' இருந்தார்கள். அவர்களின் ஆசிபெற்று, இந்தியாவுக்குள் அடியெடுத்து வைக்குமுன், அவர்களின் தலைமாட்டிலுள்ள தர்காச் சுவரில், பின்வரும் பார்ஸிக் கவியைத் தம் திருக்கரத்தால் எழுதினர்.



*கன்ஸ் பக்ஷே பைஸே' ஆலம் மஸ்ஹரே நூரே குதா*
*நாக்கிஸான்ரா பீரே காமில் காமிலான்ரா ரஹ்னுமா*

(இவர்கள் உலகத்தினருக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கருவூலமானவர்கள். இறைவனின் ஒளிச்சுடர் வெளியாகும் விளக்கானவர்கள். பாமரர்களுக்கு சம்பூரணமான ஞானகுருவாகவும், ஆன்மீக அறிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ளவர்கள்.)

அங்கிருந்து மூல்த்தான் வந்த அவர்கள், அங்கு சில காலம் தங்கி, தம்முடைய ஆன்மீகப் பிரச்சாரத்திற்கு உதவியாக இருப்பதற்காக, அக்காலத்தில் இந்தியாவின் பிரதான மொழிகளாக இருந்த, சமஸ்கிருதம், பாலி ஆகிய இரண்டையும் கற்றுக் கொண்டார்கள்.

பின்னர் டில்லி வந்து, அங்கிருந்த மக்களுக்கு இஸ்லாமிய அருள் நெறியைப் போதித்து, எழு நூறு பேர்களை இஸ்லாத்தில் இணைத்து விட்டு, கர்னூல் மாவட்டத்திலுள்ள சூனிபத் என்ற ஊருக்கு வந்து, அங்கு அடங்கப்பட்டிருக்கும் ஷைகு நாஸிருத்தீன் (ரஹ்) அவர்களின் அடக்க இடத்தில் சிலநாட்கள் தங்கி, 'கல்வத்'தில் இருந்தார்கள். அவர்கள் 'கல்வத்' இருந்த இடம், இப்பொழுதும் 'சில்லயே முபாரக் ஹஸரத் காஜா கரீப் நவாஸ்' என்ற பெயருடன், மரியாதையுடன் அழைக்கப்படுகிறது.

அங்கிருந்து காஜா அவர்கள் பாட்டியாலாவிலுள்ள நாரனோஸ் என்ற ஊருக்குச் சென்று, அங்கு சில நாட்கள் தங்கி, இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தனர். அங்குத் தமக்கு அறிமுகமான இரண்டு பீர் பாய்களைக் (உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களின் சீடர்களை) கண்டு, அளவளாவி விட்டு, அவர்கள் ஸமானா என்ற ஊர் வழியாக அஜ்மீரை நோக்கிப் பயணமாயினர். ஹிஜ்ரி 588 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் பத்தாம் நாள், (கி.பி. 1192) அவர்களின் புனிதத் திருப்பாதங்கள், அஜ்மீர் மண்ணிலே பதிந்தன. அப்பொழுது காஜா அவர்களுக்கு வயது ஐம்பத்தேழு.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், ஆடுகளை மேய்த்து வந்த அஜ்பால் என்பவரால், தம் பெயரால் நிர்மாணிக்கப்பட்ட இந் நகரமும், அதன் சூழலும், இப்பொழுது பிருதிவிராஜ் என்ற ராஜபுத்திர அரசனின் ஆட்சியில் இருந்தது. அவனுடைய அரண்மனை, அதன் அருகிலுள்ள தாராகட் என்ற குன்றின் மீது இருந்தது. அதன் அடிவாரத்திலேயே மக்கள் வாழ்ந்து வந்தார்கள். அங்கேயே அவனுடைய குதிரை, ஒட்டகை ஆகியவற்றின் தொழுவங்கள் இருந்தன.

காஜா அவர்கள் அஜ்மீர் வருவதற்கு ஓராண்டுக்கு முன், அதாவது 587/ கி.பி. 1191ஆம் ஆண்டில் கஜ்னியை ஆண்டு வந்த ஷிஹாபுத்தீன் கோரி, இந்தியாவின் மீது படையெடுத்தார். அவரை எதிர்க்கப் பல பெரிய

ராஜபுத்திர மன்னர்களும், நூற்றுக்கணக்கான சிற்றரசர்களும் திரண்டெழுந்
தனர். டில்லியை ஆண்ட கோவிந்தராயும், அஜ்மீரை ஆண்ட பிருதிவி
ராஜனும், இரண்டு லக்ஷம் குதிரை வீரர்களுக்கும், மூவாயிரம் யானை
வீரர்களுக்கும், ஏராளமான காலாட்படையினருக்கும் தலைமை தாங்கி,
டில்லியிலிருந்து எண்பது கல் தொலைவிலுள்ள தாரவாடி என்ற இடத்தில்
அவரை எதிர்த்தனர். கோவிந்தராய் தம் கையிலிருந்த ஈட்டியை
ஷிஹாபுத்தீன் மீது எறிய, அது அவரின் புயத்தில் பாய்ந்தது. அதனைப்
பிடுங்கி அவர் கோவிந்தராயின் மீது வீச, அது அவரின் சில பற்களைக்
கீழே உதிர்த்தது. புயத்தில் ஏற்பட்ட காயத்தினால் ஷிஹாபுத்தீன் குதிரை
மீது மயக்கமுற்றுச் சாய, அவரைக் கீழே விழாது பிடித்து, பக்குவமாகப்
போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்தினான் ஒரு வீரன். போர்க்களத்தின்
நடுவே தம் அரசரைக் காணாத ஷிஹாபுத்தீனின் படை வீரர்கள், வீரம்
குன்றி தலை தப்பினால் போதுமெனப் போர்க்களத்தை விட்டும் வெருண்
டோடினர். அவர்களை விரட்டி விரட்டிப் பிடித்துக் கொன்றொழித்தார்கள்
இராஜபுத்திர வீரர்கள். எஞ்சியோர் தம் அரசரை கண்ணினை இமை
காப்பது போல் காத்து கஜ்னி கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

இந்த வெற்றியினால் ஏற்பட்ட பெருமையில் பிருதிவி ராஜன் தனக்கு
எவரும் நிகரில்லை என்று எண்ணித் தருக்குடன் வாழ்ந்து வந்தான்.
அப்பொழுது தான் காஜா அவர்கள், தம் சீடர்களுடன் அங்கு வந்து, ஒரு
வெட்ட வெளியின் நடுவில் இருந்த ஒரு மரநிழலில் அமர்ந்தார்கள். சற்று
நேரத்தில் சிலர் வந்து, ''நீங்கள் இங்கே அமரக் கூடாது. இது
எங்களுடைய அரசரின் ஒட்டகங்கள் இளைப்பாறும் இடமாகும். ஆதலின்
இங்கிருந்து எழுந்து சென்று விடுங்கள்'' என்று கூறினர்.

அப்பொழுது காஜா அவர்கள், தங்களையும் அங்கு இளைப்பாற அனும
திக்குமாறு எவ்வளவோ இதமாக எடுத்துரைத்தும், அவர்கள் கேட்கவில்லை.

''நல்லது; நாங்கள் இவ் இடத்தை விட்டு அகல்கிறோம். உங்கள்
அரசரின் ஒட்டகங்கள் இங்கேயே அடைபட்டுக் கிடக்கட்டும்'' என்று
காஜா அவர்கள் கூறிவிட்டு, தம் சீடர்களுடன் அண்மையிலிருந்
அன்னாசாகர் என்ற ஏரிக்கரையில் போய்த் தங்கினர்.

அடுத்த நாள் காலையில், ஒட்டகம் மேய்ப்பவர்கள், தம் ஒட்டகங்
களை மேய விடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக எழுப்பிய பொழுது
அவற்றால் எழவே இயலவில்லை. ஒட்டகம் மேய்ப்பவர்களும்
எவ்வளவோ முயன்றும், அவற்றை ஓர் அங்குலம் கூட அவ் இடத்தை
விட்டும் அகற்ற இயலவில்லை.

இப்பொழுது, அவர்களுக்குச் சென்ற நாள் நடந்த நிகழ்ச்சி
நினைவுக்கு வர, உடனே அவர்கள் காஜா அவர்களிடம் வந்து, அவர்
களின் கால்களில் வீழ்ந்து, தங்களை மன்னித்தருளுமாறு வேண்டினர்.



காஜா அவர்களும் பெருமனத்துடன், ''நல்லது; செல்லுங்கள். எந்த எசமானனுடைய ஆணையின் மீது அவை அமர்ந்திருந்தனவோ, அந்த எசமானனுடைய ஆணை மீது அவை எழுந்து நடக்கும்'' என்று கூறினர். அவ்விதமே ஆயிற்று. அது கண்டு அந்த ஒட்டகம் மேய்ப்பவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இச் செய்தியை அவர்கள் அரசனிடம் ஓடோடி வந்து கூறியதும், அவன் அதிர்ந்து போய்விட்டான். அவன் அதிர்ந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

பிருதிவி ராஜனின் அன்னை வாசவதத்தா சோதிடத்தில் மிகப்பெரும் புலமை வாய்ந்தவளாக இருந்தாள். அவள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, இன்ன இன்ன அடையாளமுள்ள ஒருவர் இங்கு வருவார். அவரின் வரவால் உன் ஆட்சி வீழும்'' என்று தன் மகனிடம் முன்னறிவிப்புச் செய்திருந்தாள். அதுகேட்ட மகன், அவரின் படத்தைத் தம் அன்னையிடமே வரைந்து கேட்டு அதன்படிப் பல பிரதிகள் வரையச் செய்து, உளவாளிகளிடம் கொடுத்து, ''இத் தகு உருவினர் எவரேனும் நம் நாட்டு எல்லைக்குள் நுழைந்தால், அவரைப் பிடித்து என் முன் கொண்டு வரவேண்டும், அல்லது கொன்று விட வேண்டும்'' என்று ஆணையிட்டிருந்தான்.

ஏற்கனவே காஜா அவர்கள் ஸமானா வந்த பொழுது, அவர்களை இலக்குக் கண்டு கொண்ட உளவாளிகள், அவர்களைப் பற்றிய இரகசியங்களை அறிய, அவர்களை அணுகி, அவர்களுக்குப் பெரிதும் உபசாரம் செய்ய, அவர்களின் உள் நோக்கத்தைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட காஜா அவர்கள், 'பக்கீர்களுக்கு இறைவனுடைய உதவியைத் தவிர வேறு எவருடைய உதவியும் தேவையில்லை'' என்று அவர்களிடம் கூறிவிட்டு, அவ் இடத்தைவிட்டும் விரைவில் வெளியேறி அஜ்மீர் வந்து சேர்ந்திருந்தார்கள்.

ஒட்டகம் மேய்ப்பவர்கள் வந்து செய்தியைக் கூறியதும், தன் அன்னை முன்னறிவிப்புச் செய்தவர் இவராகத் தான் இருக்குமோ என்று ஐயுற்ற அவன், தம் பணியாளர்களை அழைத்து ''எவரோ ஒரு பக்கீர் தம் சீடர்களுடன் வந்து அன்னாசாகர் ஏரிக்கரையில் தங்கியிருக்கிறாராம். அவர்களை அவ் இடத்தை விட்டும் அப்புறப்படுத்துங்கள்'' என்று ஆணையிட்டான்.

அரசனின் ஆணையைச் சிரமேற்றாங்கிச் செயலாற்ற அவனின் பணியாளர்கள், அன்னாசாகர் ஏரிக்கரையை அடைந்ததும், காஜா அவர்கள் ஒருபிடி மண்ணை அள்ளி, அதில் 'ஆயத்துல் குர்ஸீ'யை ஓதி

ஊதி, அவர்கள் மீது விசி எறிந்தார்கள். அவ்வளவுதான். அவர்கள் அதனைத் தாங்க இயலாது, பெரும் கூச்சலிட்டுக் கொண்டு வெருண்டோடினர்.

இதனை அறிந்த அரசன் காஜா அவர்களைப் பெரிய மந்திரவாதி என்று எண்ணிக் கொண்டு, மந்திரத்தை மந்திரத்தால் தான் வெற்றி கொள்ள வேண்டுமென்று எண்ணி, சாதுராம் என்ற மாபெரும் மந்திரவாதியைக் காஜா அவர்களிடம் அனுப்பி வைத்தான். அவர் தம் சீடர் குழாத்துடன் காஜா அவர்களை அணுக, அவர்கள் அவரை ஏறிட்டுப் பார்க்க, அடுத்த கணம் ஒருவகைத் திடுக்கம் அவரை ஆட்கொண்டது. அவர், அவர்களின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டதுடன், அவர்களின் கரம்பிடித்து இஸ்லாத்தைத் தழுவி, அவர்களுடைய ஊழியத்தில் இருந்து கொண்டார். அவருக்கு, காஜா அவர்கள் ஷாதிதேவ் (மகிழ்ச்சியாளர்) என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.

இதன்பின் காஜா அவர்களை எதிர்த்து, மந்திர ஆற்றலினால் போராடி, அவர்களை அங்கிருந்து விரட்டிவிட, ஜெய்ப்பால் என்ற மற்றொரு மந்திரவாதியை அனுப்பி வைத்தான் அரசன். அவர் தம்முடைய ஆயிரத்து ஐந்நூறு சீடர்களுடன் தம்மை எதிர்க்க வருகின்றார் என்பதை அறிந்த காஜா அவர்கள், தம் ஊழியர் ஒருவரிடம், தம்முடைய கைக்கோலைக் கொடுத்து, நம்முடைய ஜமாஅத்தினரைச் சுற்றி பூமியில் ஒரு கோடு கிழியும். அதற்குள் நாம் இருக்கும் வரையில், அவர்களால் நமக்கு யாதொரு தீங்கும் செய்ய இயலாது'' என்று கூறினார்கள். அவ்விதமே அவரும் செய்தார்.

சற்று நேரத்தில் ஜெய்ப்பாலும், அவரின் சீடர்களும் அங்கு வந்து, அக் கோட்டிற்குள் தம் கால்களை வைத்ததும், அவர்கள் மயங்கிக் கீழே விழுந்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த அவர்கள், தள்ளாடித் தள்ளாடி அன்னாசாகர் ஏரிக்கரையின் ஒரு புறத்தில் சென்றமர்ந்து, அன்னாசாகரின் தண்ணீரைக் காஜா அவர்கள் இருக்கும் பக்கம் செல்லவிடாது தடுக்கும் முயற்சியில் ஈடுபடலாயினர்.

இதனைக் கண்ட காஜா அவர்கள் ஷாதி தேவை அழைத்து, அவரின் கரத்தில் ஒரு பாத்திரத்தைக் கொடுத்து, ''நீர் சென்று அன்னாசாகரின் நீரை இந்தப் பாத்திரத்தில் எடுத்து வாரும்'' என்று கூறினர். அவர் சென்று அன்னாசாகரில் அந்தப் பாத்திரத்தைக் கொண்டு தண்ணீர் மொண்டதும், அந்த ஏரியிலிருந்த அனைத்துத் தண்ணீரும் அப் பாத்திரத்திற்குள் வந்து விட்டது. ஒரு சொட்டுத் தண்ணீரும் ஏரியில் இல்லை. ஏரி மட்டு மல்லாது, அதனைச் சூழ இருந்த எல்லாக் கிணறுகளும் வற்றி வரண்டு விட்டன. மக்களும், மாக்களும் நீரின்றி செத்து மடியவேண்டிய அவல நிலை ஏற்பட்டுவிட்டது.



இப்பொழுது ஜெய்ப்பால் பெரிதும் திடுக்கமுற்று, காஜா அவர்களைப் பெரும் சப்தமிட்டு அழைத்து, ''மக்கள் தாகம் தாள இயலாது செத்து மடிகின்றனரே, அன்னையின் மடியில் தவழும் பச்சிளம் குழவிகளும், அன்னையின் மார்பில் பாலில்லாத காரணத்தால் பதை பதைத்துச் சாகின்றனவே. இது கண்டு உம் மனம் இரங்கவில்லையா?'' என்று கூறி ஓலமிட்டார்.

உடனே காஜா அவர்கள், ஷாதி தேவை நோக்கி, அவர் பாத்திரத்தில் எடுத்து வந்த தண்ணீரை- அதனை காஜா அவர்களும், அவர்களின் சீடர்களும் தாராளமாகப் பயன்படுத்தி வந்த போதினும், அது சிறிதேனும் குறையாது அப் பாத்திரத்தில் அப்படியே இருந்தது- அதனை மீண்டும் ஏரிக்கு எடுத்துச் சென்று, ஏரியிலேயே கொட்டி விடுமாறு பணித்தனர். அவரும் அவ்வாறே செய்ய அடுத்த கணம் ஏரி தண்ணீரால் நிரம்பித் தளும்பியது.

இதன் பின்னரும் அறிவு பெறாது, ஜெய்ப்பாலும் அவருடைய சீடர்களும், மந்திரங்களை ஜெபிக்கலாயினர். உடனே ஆயிரக்கணக்கான பாம்புகள் காடுகளிலிருந்து படையெடுத்து வந்தன. அவை காஜாவும், அவர்களின் சீடர்களும் இருக்கும் கோட்டு வளையத்திற்குள் தலையை விட்டதும், வெருண்டு பின் வாங்கி ஓடத் தலைப்பட்டன. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை.

இப்பொழுது ஜெய்ப்பால் முன்வந்து, வானத்தை அண்ணாந்து பார்த்து ஒரு மந்திரத்தை உச்சரிக்க, உடனே வானிலிருந்து நெருப்பு மழை பெய்து, சுற்றிலும் இருந்த மரங்களையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கியது. எனினும், ஒரு நெருப்புப் பொறிகூட காஜா அவர்களும், அவர்களின் சீடர்களும் இருந்த கோட்டு வளையத்திற்குள் வந்து விழவில்லை.

இது கண்டு பெரிதும் விரக்தியுற்ற ஜெய்ப்பால் மான் தோல் ஒன்றை எடுத்து, அதனை விண்ணை நோக்கி எறிந்து, அதில் பாய்ந்தேறி விண்ணிலே பறந்து, மக்களின் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து விட்டான்.

அப்பொழுது காஜா அவர்களின் சீடர்கள் தியானத்திலிருந்த காஜா அவர்களை அணுகி, ஜெய்ப்பால் மண்ணிலிருந்து தப்பியோடி, விண்ணிற் சென்று மறைந்து விட்டார் என்று கூறவும், காஜா அவர்கள் தம் காலணியை எடுத்து விண்ணை நோக்கி எறிந்தனர்.

அது விண்ணிலே பறந்து சென்று ஜெய்ப்பாலைக் கண்டுபிடித்து அவரின் தலையில் ஓங்கி, ஓங்கி அடித்த வண்ணம், அவரைப் பூமிக்கு இறக்கி வந்து, காஜா அவர்களின் திருமுன் கொண்டு வந்து விட்டது.

அவர் அழுது சலித்து காஜா அவர்களின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கோரி, இஸ்லாத்தைத் தழுவினார். அவருக்கு அப்துல்லாஹ் என்னும் அழகுசால் திருப்பெயர் சூட்டி, அரவணைத்தார்கள் காஜா.

காஜா அவர்களை எதிர்க்கச் சென்ற இருமந்திரவாதிகளும், அவர்களின் கரம் தழுவி இஸ்லாத்தைத் தழுவி, அவர்களின் ஊழியத்திலேயே தங்கிவிட்டதைக் கண்ட அரசன், இனி யாது செய்வதென அறியாது விழித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஷாதிதேவும், அப்துல்லாஹ்வும், காஜா அவர்களை அணுகி, இனியும் பொது இடத்தில் தங்கி இருப்பது நல்லதல்ல என்று கூறி, வேறு இடத்திற்குப் பெயர்ந்து செல்ல வேண்டுமென்று கூறினர். ''வேறு எவ்விடத்திற்கு?'' என்று காஜா அவர்கள் வினவுவதற்கு முன்பே, ஷாதிதேவ் தம் வாய் திறந்து ''எனக்குச் சொந்தமான ஒரு நிலம் இந்திரகோட்டின் அருகில் உள்ளது. அதில் நாம் போய்த் தங்கிக் கொள்ளலாம்'' என்று கூறினார். காஜா அவர்களும் அதற்கு இணங்கித் தம் சீடர்களுடன் போய் அதில் தங்கினர். அவ் இடத்திலேயே இப்பொழுது அவர்களின் தர்கா உள்ளது.

அங்கு போய் காஜா அவர்கள் அமர்ந்ததும், அங்கு தாங்களும், தங்களின் சீடர்களும் தங்குவதற்கான வீட்டு வசதிகளைச் செய்து கொண்டனர். அங்கு ஒரு சமையல் விடுதியும் நிர்மாணிக்கப்பட்டது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தம் தவமடத்தில் அமர்ந்து காஜா அவர்கள், தம் இஸ்லாமியப் பிரச்சாரத்தைத் தொடங்கினர். அவர்களின் மாண்பினைப்பற்றிக் கேள்வியுற்ற மக்கள், நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து, அவர்களின் கரம்பிடித்து இஸ்லாத்தைத் தழுவினர்.

காஜா அவர்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் பிரமுகர்களுக்கும், அரசனுக்கும், இஸ்லாத்தில் இணைய அழைப்பு விடுத்தனர். அரசனோ, அவர்களின் அழைப்பைக் கண்டு ஏளனமாகச் சிரித்துவிட்டு, வாளாவிருந்தான். அப்பொழுது காஜா அவர்கள் மனம் வருந்தி, ''கறுப்பு நூலால் நெய்யப்பட்ட கம்பளியை, ஹௌலுல் கவ்தர் நீரினால் கழுவியபோதினும் அதன் நிறம் மாறாது'' என்ற பொருள் பொதிந்த பார்ஸிக் கவிதை ஒன்றைக் கூறினர்.

காஜா அவர்களை எதிர்த்துக் கெடுக்க இயலாது திணறிய அரசன், அவர்களை அடுத்துக் கெடுக்க நினைத்து, ஓர் உளவாளியை அவர்களிடம் அனுப்பி வைத்து, அவர்களிடம் தீட்சை பெற்று, அவர்களின் ஊழியத்திலேயே அமர்ந்து, அவர்கள் பற்றிய இரகசியங்களை அறிந்து வரச் சதி செய்தான். இச் சதியைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட காஜா அவர்கள், அவனுக்குத் தீட்சை நல்கவில்லை. அது கண்டு வெகுண்ட



அரசன் அதற்கான காரணத்தை அறிந்துவருமாறு, ஒரு தூதுவனை அவர்களிடம் அனுப்பி வைத்தான்.

அரசத் தூதுவன் தம் முன் வந்து நின்று அரசன் கூறிய செய்தியைச் சொன்னதும் அவனுக்கு நான், ''மூன்று காரணங்களால் தீட்சை கொடுக்க வில்லை. 1) அவன் மிகப்பெரும்பாவி. 2) அவன் என்னைத் தொடர்ந்த கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. 3) அவன் ஈமான் இழந்து சாவான் என்று லவ்ஹுல் மஹ்ஃபூல் பலகையில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன்'' என்று பதிலுரைத்தார்கள் காஜா.

இதன் பின் மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. பிருதிவி ராஜனின் அவையைச் சேர்ந்த இராஜபுத்திரர் ஒருவர் காஜா அவர்களை அணுகி, இஸ்லாத்தைத் தழுவி, தீட்சையும் பெற்றார். அவரைப் பின்பற்றி, அவரின் இனத்தைச் சேர்ந்த சிலரும், அவ்வாறே செய்தனர். இதனை அறிந்த அரசன் அடங்காச் சினம் கொண்டு, அந்த இராஜ புத்திரருக்குச் சொல்லொணாத் துன்பங்கள் விளைத்தான். அவற்றைத் தாள இயலாது, அவர் காஜா அவர்களிடம் முறையிட்டார்.

காஜா அவர்களும் அவர்மீது கழிவிரக்கம் கொண்டு அவருக்காகப் பரிந்துரைத்து அரசனுக்கு மடல் தீட்டினர். அதைக் கண்டு பெரிதும் வெகுண்ட அரசன், அந்த இராஜபுத்திர முஸ்லிமை அழைத்து யார் ''இந்த பக்கீர்? என்னவென்னவோ கூறுகிறாரே. இவரின் ஆணைப்படிச் செயலாற்றவா நான் இங்கு அரியணை மீது அமர்ந்துள்ளேன்?'' என்று, ஏளனமாகவும், இளக்காரமாகவும் கூறினான். இதனைக் காஜா அவர்கள் அறிந்ததும், 'நாம் பிருதிவி ராஜனை முஸ்லிம் படைகளிடம் ஒப்படைத்துவிட்டோம்'' என்று கூறினர்.

கி.பி. 1191 ஆம் ஆண்டில் தாரவாடியில் நடந்த போரில் படுதோல்வி அடைந்து, தலைதப்பித் தம் தலை நகரை அடைந்த ஷிஹாபுத்தீன் கோரி, தோல்வியைத் தோல்வியாக ஏற்றுக் கொள்ளாது வெற்றிக்கான படியாகவே கொண்டார். அவருடைய இதயம் பழிக்குப் பழி என்றே அயராது, அல்லும் பகலும் துடித்துக் கொண்டிருந்தது. திரும்பி வந்த நாளிலிருந்து தாம் போர்க்களத்தில் அணிந்திருந்த இரத்தக்கரைபட்ட சட்டையைக் கூடக் கழற்றாது, தம் மனைவியின் முகத்தைக்கூட ஏறிட்டுப் பாராது, சிதைந்த தம் படையணிகளைச் சீர் செய்வதிலும், ஆயுதங்களைச் செய்து குவிப்பதிலும் கவனம் செலுத்தினார்.

ஒருநாள் அவர், அரசாங்கக் கருவூல அறைகளைப் பார்வையிட்டுக் கொண்டு வரும் பொழுது, அதிலே ஒரு காகிதச் சுருள் இருப்பதைக் கண்டார். அதனை எடுத்து விரித்தார். அது முன்னர் கஜ்னியை ஆண்ட

சுல்தான் மஹ்மூது கஸ்னவீ, தம் கைப்பட எழுதிய பட்டயமாக இருந்தது. அதனை இதோ ஷிஹாபுத்தீன் கோரி படிக்கிறார். நாமும் கேட்போம்:

''அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் துவங்குகிறேன். கஜ்னியின் அரச பீடத்தில் அமருபவர் எவராயிருப்பினும், அவருக்கு நான் விடுக்கும் வேண்டுகோள் இது. என் அரசவை அறிஞர் அம்பெரூனி இந்துஸ்தானில் சுற்றுப் பயணம் செய்தபொழுது, அங்கு சமஸ்கிருத மொழியில் 'அலோ உபநிஷத்' என்று ஒரு 'நூல் இருப்பதாகவும், அதில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வருகை பற்றிய முன்னறிவிப்பு, தெளிவாக வரையப்பட்டிருப்பதாகவும் கேள்வியுற்று, அதனை என்னிடம் கூறினார். அதனைக் கேள்வியுற்ற நாளிலிருந்து, அதனைக் காண வேண்டுமென்ற அடங்காப் பேரவா எனக்கேற்பட்டது. நான் பதினேழு தடவை இந்துஸ்தான் மீது படையெடுத்து, அதைக் காண முயன்ற போதினும், என்னால் அதனைக் காண இயலவில்லை. அதுபற்றி எத்தனையோ பண்டிதர்களையும் விசாரித்தேன். எனினும், அதுபற்றி எனக்கு யாதொரு துப்பும் துலங்கவில்லை; எனினும், என் மனம் என்னவோ, அத் தகு நூல் ஒன்று இருப்பதாக, நிச்சயமாக நம்புகிறது. அதனைக் கண்டுபிடித்து, உலகுக்கு உணர்த்த வேண்டியது உங்களின் தலையாய கடமை என்று கூறி முடிக்கிறேன்.

அல்லாஹ்வின் அடிமை
**மஹ்மூது கஸ்னவீ**

இதைப் படித்ததும் ஷிஹாபுத்தீன் கோரியின் தலை சுழன்றது. அதனைக் கண்டுபிடித்து, உலகிற்கு உணர்த்தும் பெரும் பேறு தமக்குக் கிடைக்க வேண்டுமென்று நீர் மல்கும் கண்களுடன், அவர் இறைவனிடம் இறைஞ்சினார். இதே நினைவாக அவர் படுத்துறங்கினார். அன்றிரவு அவரின் கனவில் காஜா அவர்கள் காட்சி வழங்கி, ''ஷிஹாபுத்தீனே! நீர் இந்துஸ்தானை வென்று, ஆட்சி செய்ய வேண்டுமென்று இறைவன் விதித்துள்ளான். ஆதலின் இந்துஸ்தான் மீது படையெடுத்து வந்து, பிருதிவி ராஜனைச் சிறை செய்து, அவனுக்குத் தகுந்த தண்டனையளிப்பீராக!'' என்று கூறி மறைந்தனர்.

அடுத்த நாள் காலையில், மன்னர் ஷிஹாபுத்தீன் கோரி, தம் அவையினரை நோக்கி, சென்ற நாள் தாம் மஹ்மூது கஸ்னவியின் கருவூல அறையில், அவரின் பட்டயத்தைக் கண்ணுற்றதையும், அன்றிரவு துயிலுறும் பொழுது, தம் கனவில் காஜா அவர்கள் வந்து கூறி மறைந்ததையும் சொன்ன பொழுது அவையினர் அனைவரும் தம் உடல் முழுவதும் ஒரு மின் ஆற்றல் ஊடுருவிப் பாய்ந்தது போன்ற உணர்வைப் பெற்றுத் தம்மை அறியாமல் 'மர்ஹபா, மர்ஹபா' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தனர்.



இதன்பின் என்ன? இந்தியப் படையெடுப்புக்கான ஆயத்தங்களெல்லாம் துரிதப்படுத்தப்பட்டன. வீரர்களெல்லாம் சாரி சாரியாக வந்து படையணியில் சேர்ந்தார்கள். சின்னாட்களில் ஷிஹாபுத்தீனின் பன்னிரண்டாயிரம் குதிரை வீரர்கள் அடங்கிய படை; 'அல்லாஹு அக்பர்! இஸ்லாம் ஜிந்தாபாத்!!' என்று பெரும் முழக்கம் செய்த வண்ணம், டில்லியை நோக்கி முன்னேறிச் சென்றது.

இப்பொழுது அஜ்மீரில் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து வருவோம். காஜா அவர்கள் தம் தவமடத்திலே அமைதியின் உருவாக வீற்றிருக்கின்றார்கள். அப்பொழுது நகர அதிகாரி ஒருவர் வந்து, வெளியே வீற்றிருந்த காஜா அவர்களின் சீடர் ஒருவரிடம், ஒரு மடலைக் கொடுத்துவிட்டுச் செல்கிறார். அதனை அவர் எடுத்துச் சென்று காஜா அவர்களிடம் கொடுத்ததும் ''யார் தந்தது?'' என்று வினவினார்கள். ''நகர அதிகாரி'' என்று பதிலுரைக்கிறார் அவர். ''எங்கே அவர்?'' என்று வினவ, ''வேட்டையாடச் சென்றுவிட்டார்'' என்று அவர் விடையிறுத்தினார். ''அவர் திரும்புவாரா?'' *என்று கூறிவிட்டு, காஜா அவர்கள் அம் மடலைப் பிரித்துப் பார்க்கிறார்கள். அதிலே, ''நீர் உடனே அஜ்மீரை விட்டும் அகலவேண்டும்'' என்று ஆணையிட்டு, அதிலே தன் முத்திரையைப் பதித்திருந்தான் பிருதிவி- தன் விதி முத்திரையிடப்பட்டு விட்டது என்பதை உணராதவனாக.

அரச ஆணையைப் பார்த்ததும் காஜா அவர்கள் புன்முறுவல் பூத்த வண்ணம், ''இன்னும் மூன்றே மூன்று நாட்களில், நான் அஜ்மீரை விட்டு அகல வேண்டுமா, அவர் அகல வேண்டுமா, என்பதை விதி தீர்மானித்து விடும்'' என்று கூறுகிறார்கள்.

அவர்கள் கூறிய வண்ணமே விதி தீர்மானித்தது. தாரவாடி என்ற இடத்தில் மீண்டும் வந்து பாளயமிறங்கிய ஷிஹாபுத்தீன் கோரி பிருதிவிராஜனுக்கு மடல் ஒன்று தீட்டினார். அதிலே அவர். ''முன்னர் முஸ்லிம்களின் ஆட்சியிலிருந்த ஸர்ஹிந்த், தானேஷ்வர் ஆகிய ஊர்களைக் காலி செய்து விட்டு, முன்னர் அஜ்மீர் அரசர்கள் எவ்வாறு மஹ்மூது கஸ்னவீக்கும் அவரின் வழித்தோன்றல்களுக்கும் விசுவாசமாய் இருந்தார்களோ, அதே போன்று, எனக்கு நீரும் விசுவாசமாயிரும். இல்லையெனில் இதுபற்றிப் போர்க்களத்தில் முடிவெடுப்போம்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதைப்படித்ததும் பிருதிவி ராஜன் கலகலவென்று சிரித்தான். ''சென்ற ஆண்டு என்னிடம் தோற்றுத் தலை தப்பி ஓடிய அந்த

✱ அவ்விதமே வேட்டையாடச் சென்ற அவர் குதிரையிலிருந்து கீழே விழுந்து மாண்டாரேயன்றி மீளவே இல்லை.

ஷிஹாபுத்தீன் கோரியா, எனக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கிறார். என்ன உத்தண்டம் இது! சரி; இதுபற்றிப் போர்க்களமே முடிவெடுக்கட்டும்!!'' என்று கூறி, இராஜபுத்திர அரசர்களுக்கெல்லாம் மடமடவென்று மடல்தீட்டினான். நொடியில் நூற்றைம்பது இராஜபுத்திர சிற்றரசர்கள் மூன்று லட்சம் குதிரைப்படையுடனும், மூவாயிரம் யானைப் படையுடனும், ஏராளமான காலாட்படையுடனும் வாயு வேகத்தில் வந்து குழுமினார்கள். கன்னோஜ் மன்னன் ஜெயச்சந்திரன் மட்டும் வரவில்லை.

இரண்டாவது தடவையாகத் தாரவாடியில், சுல்தான் ஷிஹாபுத்தீன் கோரியின் படைகளும், இராஜபுத்திரர்களின் படைகளும் பொருதிக் கொண்டன. பொழுது உதயமானதிலிருந்து பொழுது படும் வரை, கடுமையான போர் நிகழ்ந்தது. டில்லி மன்னர் கோவிந்தராயும், இன்னும் பல சிற்றரசர்களும் போர்க்களத்தில் உயிர் நீத்தனர். பிருதிவி ராஜன் போர்க்களத்திலிருந்து ஆற்றாது ஓடினான். எனினும் கோரியின் படைகள், அவனைவிரட்டிச் சென்று, ஸர்ஸுதி என்ற இடத்தில் கைது செய்தன. இராஜபுத்திரப் படையணி சீர்குலைந்து தோல்வியைச் சுமந்து கொண்டு வெருண்டோடியது. வெற்றி, ஷிஹாபுத்தீன் கோரியைக் கைலாகு கொடுத்து வரவேற்று, மாலை சூட்டியது. வெற்றி வீரராக அவர் டில்லி மாநகருக்குள் நுழைந்தார். 'அல்லாஹு அக்பர்!' என்று மக்கள் எழுப்பிய பேரொலி விண்ணை உராய்ந்தது.

'அல்லாஹு அக்பர்' என்ற அந்த ஒலி சாதாரண ஒலியா என்ன? அதற்கு நிகரான கோஷம் உலகிலே எதுவுமில்லை; எந்தக் கோஷத்திற்கும், அதுபோன்று விண்ணில் வெகு தொலை செல்லும் ஆற்றல் கிடையாது என்று இப்பொழுது தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். மக்கள் அப்பொழுது எழுப்பிய 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷத்தில், மாபெரும் பொருள் பொதிந்து கிடந்தது. இந்தியாவின் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது; முஸ்லிம்கள் டில்லியைத் தலைநகராகக் கொண்டு எழுநூறு ஆண்டுகள் ஆளப்போகிறார்கள் என்பதை அது உலகுக்குப் பறை முழக்கியது! உலக வரலாறே மாற்றியமைக்கப்பட்டது என்று அது உலகமெங்கணும் எக்காளமிட்டு எதிரொலி செய்தது!

வெற்றிப் போதையில் மூழ்கி ஷிஹாபுத்தீன் கோரி வெறுமனே இருக்கவில்லை. அடுத்த கணமே அவர், அஜ்மீருக்குக் கிளம்பிவிட்டார். ஏன்? காஜா அவர்களின் காலடியில் தம் வெற்றியைக் காணிக்கை வைப்பதற்காக! எவ்வாறு காஜா அவர்களின் முனிவு, பிருதிவி ராஜனுக்குத் தோல்வியை நல்கியதோ, அதேபோன்று அவர்களின் ஆசிதானே அவருக்கு வெற்றியை ஈட்டித் தந்தது!



அஜ்மீருக்குள் நுழைந்த கோரியின் படையினருக்குச் சிறிது எதிர்ப்பு ஏற்பட்டது. எனினும் அதனை முறியடித்து, வாகை சூடியவராக அரண்மனைக்குள் நுழைந்து அரியாசனத்தில் அமர்ந்தார் அவர்.

சற்று நேரத்தில் பிருதிவி ராஜனின் அன்னை வாசவதத்தா, அவரைக் காண வருவதாக அந்தப்புரத்திலிருந்து செய்தி வந்தது.

அதன்படி வாசவதத்தா சோகமே உருவாக அமைந்தவராய் முன்னால் வந்தார். அவரின் பின்னால் பிருதிவி ராஜனின் மனைவி சம்யுக்தாவும் மகன் கோலாவும் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களை அன்போடு வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்த ஷிஹாபுத்தீன் கோரி, வாசவதத்தாவை நோக்கி, ''அன்னையே! அஞ்சற்க!! என்னைத் தங்களின் மகன் போன்று கருதுங்கள். தங்களுக்கு எத் தீமையும் நான் இழையேன்'' என்று தைரிய மொழி கூறினார்.

இதன்பின் அன்னை வாசவதத்தா, தம் அருமை மருமகள் சம்யுக்தாவையும் அன்புப் பேரன் கோலாவையும், ஷிஹாபுத்தீன் கோரியிடம் அறிமுகப்படுத்தினார். அப்பொழுது ஷிஹாபுத்தீன் கோரி, சம்யுக்தாவை நோக்கி, ''தங்களின் வரலாறு முழுவதையும், தங்களின் தந்தை ஜெயச்சந்திரர் என்னிடம் கூறியுள்ளார். தங்களின் சுயம்வரத்திற்கு பிருதி வர மறுக்கவே, அவர் போன்று ஒரு சிலை வார்த்து வாயிலில் வைக்க, வந்திருந்த மன்னர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டுத் தாங்கள் அச்சிலைக்கே மாலையிட்டதையும், இதனை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த பிருதிவி, சரேலெனப் பாய்ந்து தங்களைத் தூக்கிக் கொண்டு புரவி ஏறிப் பறந்து சென்று, தங்களை மணமுடித்துக் கொண்டதையும் விரிவாக என்னிடம் கூறியுள்ளார். தங்களின் விருப்பத்திற்கு மாறாக, இன்னும் அவர் யாதொன்றும் செய்ய விரும்பவில்லை. தாங்கள் விரும்பின் தங்களைப் பத்திரமாகத் தம்மிடம் கன்னோஜுக்கு அனுப்பி வைக்குமாறு கூறினார். தங்கள் விருப்பம் எதுவோ கூறுங்கள். செய்யக் காத்திருக்கிறேன்'' என்று சொன்னார்.

இப்பொழுது அன்னை வாச வதத்தா, சுல்தானை நோக்கி, ''என் மகன் பிருதிவி எங்கே? அவனின் கதி யாதாயிற்று?'' என்று நீர் மல்கும் கண்களுடன் வினவினார்.

அதற்கு சுல்தான் ''அவர் நலமாக உள்ளார். அவரைப் பாதுகாப்புடன் கஜ்னிக்கு அனுப்பியுள்ளேன். அவர் இங்கிருந்தால் அவர் பொருட்டு இங்கு ஏதாவது கலகம் ஏற்படலாம் என்பதாலேயே இந்த ஏற்பாடு. அவர் எனக்குத் திரை தந்து ஆட்சிசெய்ய இணக்கம் தெரிவிப்பின், அவரை அஜ்மீரின் அரியணையில் நானே ஏற்றி அமரச் செய்வேன். தாங்கள்

அனுமதியளிப்பின், தங்களின் பேரன் கோலாவையே இவ் அரியணையில் ஏற்றி மகிழ, நான் எக்கணமும் தயாராயுள்ளேன்'' என்று கூறினார்.

பின்னர் அவர் அன்னை வாசவதத்தாவை நோக்கி, ''அன்னையே! தங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். தாங்களோ கல்வி ஞானங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். இஸ்லாத்தின் இறுதி மாநபி முஹம்மது, (ஸல்) அவர்களைப் பற்றித் தங்களின் வேத நூலான 'அலோ உபநிஷத்தில் முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருப்பதாக அறியலானேன். அதுபற்றித் தங்களுக்கு யாதேனும் தெரியுமா?'' என்று வினவினார்.

அப்பொழுது அன்னை வாசவதத்தாவின் முகத்தில் ஒரு புன்முறுவல் மின்னியது. சரேலென உள்ளே நுழைந்த அவர், சற்று நேரத்தில் ஒரு பழைய ஏட்டுச் சுவடியைக் கொண்டு வந்து, ''இதுதான் தாங்கள் கூறும் அலோ உபநிஷத். இது எங்களின் அதர்வ வேதத்தின் ஒரு பகுதியாகும். இதில் தங்களின் திருநபியைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைப் படிக்கிறேன். கேளுங்கள்'' என்று கூறிப் பின்வருமாறு படிக்கலானார்.

'அல்லா ஜி யேஷ்டம் பரமம் பூரணம் பிரஹ்மாணம் அல்லாம் அல்லோ ரஸூலா மஹாமத் கபரஸ்ய-ஸஸீர ஸம்ரஹாரிணி ஹோம் ஹிரீம் அல்லோ ரஸூல மஹாமத் கபரஸ்ய அல்லோ இல்லல்லே தி இல்லல்லலா''

படித்து முடிந்ததும், ''இதன் பொருளையும் கூறுகின்றேன். கேளுங்கள்'' என்று சொல்லிவிட்டு ''அல்லாஹ்வுக்கு துவக்கம் இல்லை. அவன் சம்பூரணமானவன், முழுப்பிரஹ்மானத்துடைய இரட்சகன். சிவனுடைய பதவியிலிருக்கும் மஹாமத், அல்லாஹ்வுடைய ரசூல். ஓம் ஹிரீம் மந்திர மூலமாகத் தீயோர்களை அழிக்கும் மஹாமத், அல்லாஹ்வின் ரசூல். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியோன் வேறு எவருமில்லை'' என்று பொருள் விரித்தார்.

அதைக் கேட்டதும் மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்த சுல்தான் ஷிஹாபுத்தீன் கோரி, அந்த ஏட்டுச் சுவடியை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அவருக்கு இந்த ஏட்டுச் சுவடி கிடைத்தது, தாரவாடியில் அவருக்குக் கிடைத்த வெற்றியினும் பதின் மடங்கு மகிழ்ச்சியை அளித்தது.

மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தவராய், காஜா அவர்களின் தவமடத்தை அடைந்த அவர், காஜா அவர்களின் பாதங்களில் தம் வெற்றியைக் காணிக்கையாக வைத்து, மரியாதையாகக் கைகட்டி நின்றார். அவரைக் காஜா அவர்கள் ஆரத் தழுவி வரவேற்று ஆசீர்வதித்தார்கள்.



இதன்பின் பிருதிவி ராஜனின் மகன் கோலாவை அரியணையில் ஏற்றிய சுல்தான் ஷிஹாபுத்தீன் கோரி, அஜ்மீர் நகரை மட்டும் நிர்வகிக்க, காஜா அவர்களின் அன்பிற்குரிய மாணவர் சையித் ஹஸன் மஷ்ஹதீ என்ற ஷீயா முஸ்லிமை நியமனம் செய்தார். * பின்னர் டில்லி சென்ற அவர் அங்கு தம் பிரதிநிதியாக குத்புத்தீன் ஐபெக் என்பவரை நியமித்து விட்டு, தம் தலைநகரான கஜ்னிக்கு வெற்றி வீரராகத் திரும்பினார்.

அஜ்மீரில் அமர்ந்து ஆன்மீகச் செங்கோல் செலுத்தத் துவங்கிய காஜா அவர்களின் திருமுன், ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் வந்து இஸ்லாத்தைத் தழுவினர். அவர்கள் வந்த பொழுது மருந்துக்குக் கூட ஒரு முஸ்லிமைக் காண்பது அரிதாக இருந்த அஜ்மீர் நகரம், இப்பொழுது முஸ்லிம்களால் நிரம்பித் துளும்பியது. இந்துக்களாக அங்கு வந்த மக்கள், காஜா அவர்களின் அருட்கண்பட்ட மாத்திரத்தில் முஸ்லிம்களாக மாறினார்கள்.

காஜா அவர்கள் அஜ்மீர் வந்து மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இதற்கிடையே அவர்கள் ஒரு தடவை டில்லிக்கும், குராஸானுக்கும் சென்று வந்தார்கள்.

அவர்கள் அறுபது வயதை எய்திய பொழுது, ஓரிரவு அயர்ந்து உறங்குங்கால் கனவொன்று கண்டனர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''முயீனுத்தீன்! நீர் அல்லாஹ்வின் நல்லடியாராவீர். நீர் என்னுடைய வழி முறையாகிய திருமணத்தை நிறைவேற்றுவீராக!'' என்று அமுதவாய் விண்டுவிட்டு மறைந்தனர்.

விழித்தெழுந்த அவர்கள் இதுபற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, தளபதி ஒருவர் தாம் ஒரு போரில் சிறை செய்த ஒரு சிற்றரசரின் மகளை, அவர்களின் முன் கொண்டு வந்து நிறுத்தினார். அவரை இஸ்லாத்திலாக்கி, பீபி அமதுல்லாஹ் என்னும் அழகுத் திருப்பெயரும் சூட்டி, அவரை மணமுடித்துக் கொண்டார்கள் காஜா. அவர் மூலம் அவர்களுக்கு பக்ருத்தீன், ஹிஸாமுத்தீன் என்ற இரண்டு ஆண்மக்களும், பீபி ஹாபிஸ் ஜமால் என்ற மகளும் பிறந்தனர்.

ஹிஜ்ரி 602 ஆம் ஆண்டில் அவர்கள் கஜ்னி, லாகூர் ஆகிய இடங்களுக்குச் சென்று விட்டு டில்லி திரும்பினர். இப்பொழுது ஷிஹாபுத்தீன் கோரி இறந்து விட்டதால், அவரின் பிரதிநிதியாக டில்லியில் இருந்து ஆட்சி செய்த அவரின் அடிமையும், வளர்ப்பு மகனுமான குத்புத்தீன் ஐபெக், சுல்தான் எனப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

* அவரைச் சிறிது காலம் சென்று, பிருதிவிராஜனின் ஆதரவாளர்கள் கொலை செய்துவிட்டனர். அவரின் அடக்க இடம் தாராகாட் மலை மீது உள்ளது.

ஹிஜ்ரி 611-ஆம் ஆண்டில் சுல்தான் குத்புத்தீன் ஐபெக் இறப் பெய்தவே அவரின் அடிமையும், அவரின் மகளை மணமுடித்த மருகரு மான ஷம்சுத்தீன் அல்தமிஷ், டில்லி அரியணை ஏறினார். பல்லாண்டு களுக்கு முன் அவர் பன்னிரண்டு வயது இளவலாக இருந்தபொழுது, பக்தாதில் வைத்து காஜா அவர்கள் செய்த முன்னறிவிப்பு இப்பொழுது நிரூபணமாகி விட்டது!

இப்பொழுது காஜா அவர்களின் ஆன்மீக மாணவர் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்கள், பக்தாதிலிருந்து மூல்த்தான் வழியாக டில்லிக்கு வருகை தந்தபொழுது, சுல்தான் அல்தமிஷுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. தம் அமைச்சர் பெருமக்களுடன் அவர்களை நகர எல்லையில் வைத்து வரவேற்று, நகருக்குள் அழைத்து வந்து தனிப்பெரும் மரியாதைகள் செய்து கௌரவித்து, தீட்சை பெற்றார். அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு, டில்லி மாநகர மக்களும் சாரி சாரியாக வந்து அவர்களின் கரம் பிடித்து தீட்சை பெற்று மகிழ்ந்தார்கள்.

தம் ஆசானைக் காண வேண்டுமென்று அடங்கா ஆவல் கொண்டிருந்த குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களுக்கு, டில்லி வாழ்க்கை அமைதி நல்கவில்லை. தம் ஆசானின் ஆன்மீக பீடமாகிய அஜ்மீர் வருவதற்கு அனுமதி வேண்டி, அவர்கள் தம் ஆசானுக்கு மடல் ஒன்று தீட்டினர். சின்னாட்களில் அவர்களுக்குத் தம் ஆசானிடமிருந்து பதிலும் வந்தது. அதிலே அவர்கள், ''டில்லியின் ஆன்மீக அரசாதிபத்தியம் உம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் அங்கேயே தங்கி இரும். விரைவில் நான் அங்கு வந்து சேர்கிறேன். நாம் இருவரும் உடலால் தொலைவில் இருந்தபோதினும், ஆன்மாவால் நெருக்கமாகவே உள்ளோம்'' என்று எழுதியிருந்தார்கள்.

தாம் எழுதிய வண்ணம், காஜா அவர்கள், விரைவில் டில்லியில் தம் மாணவர் தங்கியிருந்த அய்னுத்தீன் பள்ளிவாயிலுக்கு வருகை தந்த பொழுது, குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சி யுற்றனர். தம் ஆசானின் வருகையை உடனே அவர்கள் சுல்தான் அல்தமிஷுக்குத் தெரியப்படுத்த விரும்பிய பொழுது, காஜா அவர்கள் 'வேண்டாம்' என்று கூறித் தடுத்து விட்டார்கள். எனினும், அவர்களின் வருகை பற்றிய செய்தி காட்டுத் தீபோல் நொடியில் நகரமெங்கணும் பரவி, சுல்தானின் செவியையும் எட்டவே, அவர் தம் அமைச்சர் பெருமக்களுடன் அய்னுத்தீன் பள்ளி வாயிலுக்கு ஓடோடி வந்ததும், அவர்களைப் பின் தொடர்ந்து மக்கள் வெள்ளம் அய்னுத்தீன் பள்ளி வாயிலை நோக்கி அலை வீசிப் பாய்ந்தோடி வந்ததும், கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன.



இதன்பின் மற்றொரு பெருமகிழ்ச்சியும் டில்லி மாநகருக்கு ஏற்பட்டது. ஹிஜ்ரி 611-ஆம் ஆண்டு, துல்ஹஜ் முதல் பிறை, (கி.பி. 1215-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ஆம் தேதி) காஜா அவர்களின் ஆன்மீக ஆசான் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களோ, தம் மாணவரைக் காண்பதற்காக அங்கு வருகை தந்தார்கள். ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் வைத்துத் தம் ஆசானையும், தம் ஆசானின் ஆசானையும், தம் ஆசானின் ஆசானின் ஆசானையும் காண்பதற்கு தங்களுக்கு இறைவன் தந்த இரு கண்கள் பற்றாவென்றும், மூன்றாவது கண்ணும் வேண்டுமென்றும் டில்லி மாநகர மக்கள் பேசிக் கொண்டதில் எவ்வித வியப்புமில்லை.

டில்லியில் தம் ஆசான் தாம் தங்கித் தவம் செய்ய ஓர் ஒதுக்குப் புறமான இடத்தைத் தேர்ந்தெடுத்ததைக் கண்ட காஜா அவர்கள், தம் ஆசான் நிரந்தரமாகத் தங்கித் தவம் செய்ய வசதியான மற்றோர் இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார்கள். அப்பொழுது உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், காஜா அவர்களை நோக்கி, ''முயீனுத்தீனே! வேண்டாம். நீர் சிறிது காலம் என்னுடன் தங்கியிரும். அத் தொடர்பின் மூலம் நீர் சில ஆன்மீக ஆற்றல்களை எய்தப் பெறுவீர். அதன் பின் நீர் அஜ்மீர் சென்று அங்கேயே நிரந்தரமாகத் தங்கிக் கொள்ளும்'' என்று அருள் வாய் விண்டனர்.

இப்பொழுது சுல்தான் அல்தமிஷும், தம் அமைச்சர் பெருமக்களுடன் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக அங்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது அவர் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களிடம், தம்மை அவர்களின் சீடர்களில் ஒருவராக ஏற்றுத் தமக்கு ஆன்மீகப் பயிற்சி அளித்து ஆட்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார்.

அவரின் உளப்பூர்வமான வேண்டுகோளை உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள் ஏற்று, அவருக்கு தீட்சை வழங்கியதுடன், அவரின் தலையில் தீட்சையின் அடையாளமான 'குல்லா'வையும் அணிவித்துக் கௌர வித்தனர். அதன்பின் அவர்கள், அவரை ஆன்மீகத்தின் பல்வேறு துறைகளிலும் புகுத்திப் பயிற்சியும் அளித்தார்கள்.

பின்னர் அவர்கள், காஜா அவர்களை நோக்கி, அவருக்கு ஆன்மீகப் பாதையில் வழிகாட்டும் ஒளி விளக்கென ஒரு நூலை, குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் அடிப்படையில் ஆக்கிக் கொடுக்குமாறு ஆணையிட்டனர்.

அவ்விதமே அவர்கள் 'கன்ஸுல் அஸ்ரார்' என்ற பெயருடன் இருபத் தைந்து பகுதிகளடங்கிய ஒரு நூலை எழுதி, சுல்தானுக்கு அன்பளிப்புச் செய்தனர். அவர் அதனை நன்கு படித்துச் சிரமேற்கொண்டு, ஆன்மீகத்துறையில் அடியெடுத்து வைத்து நடந்து, இறைநேசச் செல்வரின் படித்தரத்தை எய்தப் பெற்றார்.

இப்பொழுது ஷீராஸின் கவிஞர் பெருமான், குலிஸ்தான் புகழ் ஷைகு ஸஅதியும் டில்லிக்கு வருகை தந்தார். அவர் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களையும், காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவ்களையும், காஜா குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களையும் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தார்.*

ஒரு தடவை அவர் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களை நோக்கி, ''இப்பொழுது எங்குப் பார்த்தாலும் போலி ஞானிகள் மயமாக உள்ளதே. இச் சூழலில் உண்மையான ஞானிகளை எவ்வாறு அறிவது?'' என்று வினயமாக வேண்டி நின்றார். அதற்கு உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், ''உண்மையான ஞானிகளிடம் உலக ஆசை அணுவத்தனையும் இருக்காது'' என்று பதிலிறுத்தார்கள்.

ஹிஜ்ரி 615-ஆம் ஆண்டிலேயே உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், டில்லியை விட்டு மக்கமா நகர் நோக்கிப் புறப்பட்டார்கள். அதன் பின்னரும், காஜா அவர்கள் சிறிது காலம் டில்லியில் தங்கி, சுல்தானுக்கு ஆன்மீகப் பயிற்சி அளித்துவிட்டுப் பின்னர் அஜ்மீர் திரும்பி, அதனையே தம் நிரந்தர இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார்கள்.

அஜ்மீர் திரும்பிய சிறிது காலத்திற்குள் காஜா அவர்களின் அன்பு மனைவி பீபி அமதுல்லாஹ் இம்மை வாழ்வை உதறித் தள்ளி, மறுமை வாழ்வை எய்தப் பெற்றார்.

இச் சமயம் அஜ்மீரில் ஸையிது வஜ்ஹுத்தீன் மஷ்ஹதீ என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஷிஹாபுத்தீன் கோரியால், அஜ்மீர் நகரின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டுப் பின்னர், தீயோர் சிலரால் கொலை செய்யப்பட்ட ஸையிது ஹஸன் மஷ்ஹதீயின் உடன் பிறந்தார் ஆவார் அவர். அவருக்குக் கற்பெலாம் திரண்ட கன்னியாக, ஒரு மகள் இருந்தார். அவரின் பெயர் பீபி இஸ்மத்துல்லாஹ் என்பதாகும்.

ஓரிரவு ஸையிது வஜ்ஹுத்தீன் மஷ்ஹதீ அயர்ந்து உறங்கும் பொழுது, அவரின் கனவில் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''வஜ்ஹுத்தீனே! உம் அன்புத் திருமகள் பீபி இஸ்மத்துல்லாஹ்வை ஹிந்துல் வலீ காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களுக்கு மணமுடித்து வையும். இது அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் ஆணை'' என்று அருள்வாய் மலர்ந்துவிட்டு மறைந்தனர்.

* காஜா அவர்கள் தாம் எழுதிய 'கன்ஸுல் அஸ்ரார்' என்ற நூலில் ஷைகு ஸஅதியின் கவிதைகளையும் பொன்மொழிகளையும் பயன்படுத்தியுள்ளது இதனை உறுதிப் படுத்துகிறது.



விடிந்தெழுந்ததும் அவர் காஜா அவர்களிடம் சென்று தாம் கண்ட கனவைக் கூற, அதுகேட்ட காஜா அவர்கள், யாதும் பதில் கூறாது சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். பின்னர் அவர்கள், அப் பெரியாரை நோக்கி, ''நானோ மணமுடித்து மகிழும் காலத்தையெல்லாம் கடந்து, முதுமையின் விளிம்பை நோக்கிச் சென்று கொண்டிருப்பவன். எனினும், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் ஆணையைத் தலைமேற் கொள்கிறேன்'' என்று கூறி, அவரின் அருமைத் திருமகள் பீபி இஸ்மத் துல்லாஹ்வைத் தம்முடைய தொண்ணூறாவது வயதில் மணமுடித்துக் கொண்டனர். இதன் காரணமாக ஏராளமான ஷீயாக்கள் சுன்னத் வல் ஜமாஅத்துக்கு வந்தனர். இத் திருமணத்தின் மூலம், காஜா அவர்களுக்கு ஜியாவுத்தீன் அபூஸயீத் என்ற மகன் பிறந்தார்.

இதன்பின் ஒரு தடவை காஜா அவர்கள், டில்லிக்கு வருகை தந்தார்கள். *இதுவே அவர்கள் டில்லிக்கு இறுதியாக வந்ததாக இருந்தது. சின்னாட்கள் அங்குத் தங்கியிருந்த அவர்கள், ஒருநாள் ஒரு வீதி வழியே சென்ற பொழுது, அங்கு ஏழு பேர் ஒரு கோயிலில் நின்று அங்கிருந்த உருவச் சிலையைக் கும்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர் களின் மீது காஜா அவர்களின் அருட்கண் பார்வை பட்டதும், அடுத்த கணம் அவர்கள் கும்பிட்ட தெய்வத்தைவிட்டு விட்டு, காஜா அவர்களின் கால்களில் வீழ்ந்து இஸ்லாத்தைத் தழுவினர். அவர்களில் முதியவராக இருந்த ஒருவருக்கு, காஜா அவர்கள் ஹமீதுத்தீன் எனப் பெயர் சூட்டினர். பின்னர் ஏனையோருக்கும் என்ன பெயர் சூட்டுவது என்று அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, அந்த அறுவரும் அவர்களை நோக்கி, ''நாங்கள் உருவத் தொழும்பிலும் ஒன்றுபட்டிருந்தோம். இஸ்லாத்திலும் ஒன்றுபட்டே இணைந்தோம். எனவே, எங்களின் பெயர்களிலும் ஒற்றுமை நிலவவேண்டுமென்று விரும்புகின்றோம்'' என்று பணிவுடன் கூறினர்.

அப்பொழுது காஜா அவர்களின் செந்தாமரை முகம் மலர்ந்தது. ''நல்லது; அவ்விதமே செய்வோம்'' என்று கூறி முதலாமவருக்கு ஹமீதுத்தீன் கைர் என்றும், இரண்டாமவருக்கு காஸா பர்தர் ஹமீதுத்தீன் என்றும் மூன்றாமவருக்கு ஹமீதுத்தீன் அஸர் என்றும், நான்காமவருக்கு ஹமீதுத்தீன் ரேஹானி என்றும், ஐந்தாமவருக்கு ஹமீதுத்தீன் மஃரிபி என்றும், ஆறாமவருக்கு ஹமீதுத்தீன் காஸா என்றும், ஏழாமவருககு ஹமீதுத்தீன் தெஹ்லவீ என்றும் பெயர் சூட்டினார்கள்.

* இதுபற்றிய விவரம் அடுத்து வரும் பக்தியாரி (ரஹ்) அவர்களின் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்பின் அஜ்மீர் திரும்பிய காஜா அவர்கள், அங்கேயே தங்கி ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வந்தனர். அவர்களின் அப்பழுக்கற்ற தூய ஆன்மீக வாழ்வோ, மற்றவர்கள் கண்டுவியக்கத்தக்கதாய் இருந்தது. ஆண்டுக்கணக்காக அவர்கள் இரவுத் தொழுகைக்குச் செய்யும் 'உளூ'வுடன் வைகறைத் தொழுகையைத் தொழுது வந்தார்கள். இரவெல்லாம் வணக்கம் புரிந்து வந்த அவர்கள், எழுபது ஆண்டுகளாக இரவில் தலையணையில் தலையை வைத்துப் படுத்து உறங்கியதில்லை.

திருக்குர்ஆனை ஓதுவதில் அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சி இருந்தது. அவர்கள் பகலில் ஒரு தடவையும், இரவில் ஒரு தடவையு மாக, ஒரு நாளைக்கு இரண்டு தடவை திருக்குர்ஆனை ஓதி முடிப்பர்.

ஒவ்வோர் இரவும், அவர்கள் மக்கா சென்று வணக்கம் நிகழ்த்தி விட்டு, வைகறைத் தொழுகையில் கலந்து கொள்வதற்காக, அஜ்மீர் திரும்பி விடுவர் என்றும், இந்தியாவிலிருநது சென்ற யாத்திரிகர்கள் அவர்களைப் பல தடவை கஃபாவை இடம் சுற்றி வரக் கண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அவர்களின் திருவதனத்தில் எப்பொழுதும் கவலையின் சாயல் படிந்திருந்தது. அவர்களின் ஊழியத்தில் தாம் இருபதாண்டுகள் இருந்ததாகவும், ஆனால் அவர்கள் ஒரு நாளேனும் தமக்கு உடல் நலத்தைத் தருமாறு இறைஞ்சவில்லை என்றும், அவர்களின் மாணவர் குத்புத்தீன் பக்தி''யாரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு நாள் காஜா அவர்கள் இரு கரமேந்தி ''இறைவ! எம்பெரும! நோய் எங்கிருந்த போதினும் அதனை உன் அடியான் முயீனுத்தீனுக்குத் தந்தருள்வாயாக!'' என்று இறைஞ்சினர். அவர்களின் இவ் இறைஞ்சுதல் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களைப் பெரிதும் வியப்புறச் செய்தது. உடனே அவர்கள் தம் ஆசானை நோக்கி ''என்ன இவ்வாறு இறைஞ்சி விட்டீர்கள்? நோயை நல்குமாறு எவரேனும் இறைஞ்சுவார்களா?'' என்று வினயமாய் வினவினர்.

அதற்கு காஜா அவர்கள் ''ஒரு முஸ்லிமுக்குப் பிணி என்பது அவனின் பவம் போக்கும் அருமருந்தல்லவா? அவனின் இறை நம்பிக்கையை தூய்மைப்படுத்தும் அமுத சஞ்சீவியல்லவா?'' என்., 'பதிலுரைத்தார்கள்.

அவர்கள் தம்மை மறந்து இறை தியானத்தில் மூழ்கியிருக்கும் பொழுது, தொழுகை நேரம் வந்து விடின், அவர்களின் மாணவர் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்கள், அருகே சென்று 'தொழுகை, தொழுகை' என்று ஒலி எழுப்புவர். அவ் வொலி கேட்டு அவர்கள் தன்னுணர்வு பெறாவிடின், அவர்களை உசுப்பி உணர்வு பெறச் செய்வர்.



அதன்பின் காஜா அவர்கள் இமாமாக நின்று தொழ வைப்பர். அவர்களின் மாணவர்களான குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களும், ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்களும் அவர்களின் பின்னே நின்று தொழுவர். காஜா அவர்கள் தொழுது முடித்து 'ஸலாம்' கொடுத்ததும், அவர்களின் முகம் 'ஜலாலியத்' மயமாகக் காட்சி வழங்கும். அப்பொழுது அவர்களின் முன் வர அஞ்சி, உடனே அவ் இருவரும் போய் ஒளிந்து கொள்வார்கள்.

தொழுது முடிந்த பின், மீண்டும் கண்களை மூடித் தன்னுணர்வற்ற தியானத்தில் மூழ்கி விடும் காஜா அவர்கள், மீண்டும் தொழுகை நேரம் வந்த பொழுதுதான், தன்னுணர்வு பெற்றுக் கண்களைத் திறப்பர். அப்பொழுது அவர்களின், அருட்பார்வை எவர் மீது விழுகிறதோ, அவர் 'வலீ'யாகும் பேறு பெறுவார். அவர்களுடன் மூன்று நாட்கள் தங்கி இருக்கும் எவரும் ஆன்மீக ஆற்றல் எய்தப் பெறுவார்.

சிலபொழுது காஜா அவர்கள் தன்னுணர்வோடு தியானத்தில் ஈடுபட் டிருப்பர். அப்பொழுது வெளிச்சப்தம் தம் செவிகளில் புகாவண்ணம் தம் தியான அறையின் கதவுகளை இறுக மூடிவிடுவார்கள்.

காஜா அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்போ அளப்பரியதாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருளுரை களைக் கூறுந்தொறும், கூறுந்தொறும் அவர்கள் உளம் உருகிக் கண்ணீர் சொரிவர். ஒரு தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருளுரை களைக் கூறிய அவர்கள், ''நியாயத் தீர்ப்பு நாளின் போது, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருவதனத்தைப் பார்க்க நாணமுறுபவனைப் போன்ற கொடிய பாவி எவனுமில்லை. அப்பொழுது நாணமுறுபவன், வேறு எங்கு போய்த்தான் ஒளிந்து கொள்வான்? அவனுக்குப் புகலிடம் தான் ஏது?'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

தமக்கு ஆன்மீக அறிவைப் போதித்த ஆசானிடத்திலும், அவர்கள் பெரிதும் பக்தி செலுத்தி வந்தனர். ஒரு நாள் அவர்கள் தம் நண்பர்கள் சிலருடன் அமர்ந்து ஆன்மீகம் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் வலப்புறம் திரும்பும் பொழுதெல்லாம் எழுந்து நின்றனர். இது அவர்களின் நண்பர்களுக்கு வியப்பையும் திகைப்பையும் அளித்தது.

அப்பொழுது அவர்களில் ஒருவர் சற்றுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, அதற்கான காரணத்தை காஜா அவர்களிடம் பணிவுடன் வினவினார். அதற்கு காஜா அவர்கள் ''என் ஆன்மீக ஆசானின் அடக்க இடம் என் வலப் பக்கம் உள்ளது. நான் அப் பக்கம் திரும்பும்

தோறெல்லாம், அது என் கண் முன் காட்சி வழங்குகிறது. எனவே அதனைக் கண்டதும், என் ஆசானுக்கு மரியாதை செலுத்துவதற்காக எழுந்து நின்றேன்'' என்று கூறினர்.

இறையச்சம் அவர்களின் உள்ளத்தை எப்பொழுதும் ஆட்கொண்டிருந்தது. சிலபொழுது இறையச்சத்தால் நடுங்கவும், தேம்பித் தேம்பி அழவும் செய்வர். அடக்க இடத்தின் துன்பங்களை நினைத்தும் அவர்கள் அழுவார்கள். ''அடக்க இடத்தில் நிகழும் துன்ப நிகழ்ச்சிகளை ஒருவன் அணுவளவேனும் அறியவரின், அவன் நீரில் உப்புக் கரைவது போன்று கரைந்து விடுவான்'' என்று அவர்கள் கூறுவார்கள்.

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் பண்பாளராக அவர்கள் இருந்தார்கள். ஒருவன் அவர்களைக் கொல்லும் நோக்குடன், பக்கீர் வேடம் தாங்கி அவர்களின் திருச்சமுகம் வந்தபொழுது, அவனை அன்போடு வரவேற்றுத் தம் அருகே அமர்த்தி அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் அவனை நோக்கி, 'பக்கீரிடம் ஒரு பக்கீர் வரின், உளத் தூய்மையை நாடி வருவார். ஆதலின் நீர், உம் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும். இல்லையெனில், நீர் வந்த வேலையை முடித்துக் கொள்ளும்'' என்று கூறினர். அடுத்த கணம் அவன் பெரிதும் நடுக்கத்துடன் அவர்களின் காலில் வீழ்ந்து, தன் கட்கத்தில் மறைத்து வைத்திருந்த குறுவாளையும் அவர்களின் திருமுன் வைத்து, ''ஆண்டகை அவர்களே! என்னை மன்னித்தருளுங்கள். கையூட்டுப் பெற்றுத் தங்களைக் கொல்ல வந்தேன். எனக்குத் தகுந்த தண்டனை வழங்குங்கள். இக் குறுவாளாலேயே என்னைத் தீர்த்துக் கட்டுங்கள்'' என்று தேம்பித் தேம்பி அழுத வண்ணம் கூறினான்.

அதற்கு ஆண்டகை அவர்கள் ''அல்லாஹ்வின் அடியார்களாகிய என் போன்ற பக்கீர்கள், தீமை செய்தோர்க்கும் நன்மையே செய்வரன்றி, ஒரு போதும் தீமை புரியார்கள். மேலும், நீ எனக்கு யாதொரு தீமையும் இழைக்கவில்லையே'' என்று கனிவோடு பதிலிறுத்தார்கள்.

அப்பொழுது அங்கிருந்தோர், அவனை நோக்கி ''உனக்கு எவர் கையூட்டு வழங்கி, இங்கு அனுப்பி வைத்தார்?'' என்று வினவினர்.

உடனே காஜா அவர்கள், அவர்களைப் பார்த்து ''நீங்கள் அதனைக் கேட்கக் கூடாது'' என்று கண்டித்ததுடன், அவன் பக்கல் திரும்பி ''நீ அதனை ஒரு போதும் எவரிடமும் கூறாதே. இத்தகு செய்திகளை மறைப்பது மார்க்கத்தின் கடமைகளில் ஒன்றாகும்'' என்று கூறினர்.

அதன்பின் அவர்கள், தம் இருகரம் ஏந்தி, அவனுக்காக இறைவனிடம் இறைஞ்சினர். என்ன வியப்பு! அடுத்தகணம் அவர், அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினார். அது மட்டுமா? பதினான்கு தடவை மக்காவுக்கு நடந்து சென்று 'ஹஜ்'ஜு செய்து அங்கேயே இறப்பெய்தி, அங்குள்ள 'ஜன்னத்துல் முஅல்லா' என்ற அடக்க இடத்தில் அடக்கப் பெறும் நற்பேற்றினையும் பெற்றார்.



மற்றொரு நாள் காஜா அவர்கள் தம் தவமடத்தில் அமர்ந்து கண்களை மூடித் தியானத்தில் மூழ்கி இருக்கும் பொழுது, அவர்களைக் கொன்றொழிக்கும் நோக்குடன் கத்தியைக் கட்கத்தில் வைத்து மறைத்த வண்ணம் ஒருவன் வந்தான். இதனை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட காஜா அவர்கள். அவன் அவர்களை நெருங்கியதும் தம் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தார்கள். அடுத்தகணம் அவன் நிலை தடுமாறி நெடுமரம் போலக் கீழே சாய்ந்தான். சற்றுநேரம் கழித்து உணர்வு பெற்றதும், அவர்களின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக்கோரி, இஸ்லாலத்தைத் தழுவினான். அவனைப் பின் தொடர்ந்து அன்றையத் தினமே எழுநூறு பேர் இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

வேறொரு நாள் அவர்கள் தம் மாணவர்களுடன் இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காக ஒரு சிற்றூர் சென்ற பொழுது, அங்குள்ளோர் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அவர்களை எதிர்க்க வந்தனர். அவர்கள் மீது காஜா அவர்களின் அருட்பார்வை பட்டது. அவர்கள் தங்களின் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு, காஜா அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினர்.

காஜா அவர்களின் அன்புள்ளம், அனைவரையும் தழுவி நின்றது. எவரேனும் இறந்துவிடின், அவரின் இறப்புச் சடங்கில் அவர்கள் முழுக்க, முழுக்கக் கலந்து கொண்டு, அவரை அடக்கிவிட்டு, எல்லோரும் இல்லம் திரும்பிவிட்ட போதும் கூட, அவர்கள் மட்டும் அவரின் அடக்க இடத்தில் தங்கி அவருக்காக நெடுநேரம் இறைவனிடம் இறைஞ்சி விட்டே தம் தவமடம் மீள்வர்.

ஒரு தடவை இவ்வாறு அவர்கள் ஒருவரின் அட்க்கச் சடங்கில் கலந்து கொண்டு, அவரின் அடக்க இடத்தில் அமர்ந்து நெடுநேரம் அவருக்காக இறைஞ்சிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களின் மாணவர் குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்களும், அவர்களுடன் இருந்தனர். அப்பொழுது அவர்களின் முகத்தின் நிறம் மாறுதலடைந்தது. பின்னர் சற்று நேரம் கழித்து, அது இயற்கை நிறத்தை எய்தப் பெற்றது. அவர்களும் 'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்று கூறிய வண்ணம், அவ் இடத்தை விட்டும் எழுந்து, தம் தவமடம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்கள், தம் ஆசானை நோக்கி, ''தங்களின் முகம் திடீரென மாறுதல் அடையவும்,

பின்னர் இயற்கை நிலையை எய்தப் பெறவும் காரணம் என்ன?'' என்று வினவினர்.

அதற்கு காஜா அவர்கள், ''அவர் அடக்க இடத்தில் வைக்கப் பட்டதும், வேதனை செய்யும் அமரர்கள் அவருடைய அடக்க இடத்தில் வந்து இறங்கினர். அது கண்டு என் உள்ளம் பதறியது. அதன் காரணமாக என் முகம் பேதலித்தது. அப்பொழுது அவரின் ஆன்மீக ஆசானும், என்னுடைய ஆன்மீக ஆசானுமாகிய உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள், ஆன்மீக முறையில் அங்குத் திருத்தோற்றம் வழங்கி, ''இவர் என்னிடம் தீட்சை பெற்றவர். எனவே இவரைத் துன்புறுத்த வேண்டாம்'' என்று வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர்கள், ''இவர் தாம் தங்களிடம் பெற்ற தீட்சையை வீணாக்கி விட்டாரே'' என்று கூறினர். அதற்கு அவர்கள் ''அவர் தம்மை ஓர் உண்மையான பக்கீருடன் இணைத்துக் கொண்டாரா தலின், அதன் பொருட்டாவது அவரை வேதனைப்படுத்த வேண்டா மென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறினர். அப் பொழுது இறைவனிடமிருந்து, அவரை வேதனைப் படுத்த வேண்டா மென்று, அந்த அமரர்களுக்கு ஆணை வந்தது. அப்பொழுது தான் என் மனம் அமைதியுற்றது. என் முகம் மலர்ந்தது'' என்று விடையிறுத் தார்கள்.

அவர்களிடம் எவர் வந்து, எதை வேண்டிய போதினும் உடனே அவர்கள், அதனை அவருக்கு வழங்கி மகிழ்வர். ஒரு நாள் அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் அருள்வாயில் திறந்து கிடக்கிறது. உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள். கிடைக்கும்'' என்று கூறினர். அப்பொழுது ஒருவர், தமக்கு இவ் உலக பாக்கியங்களை வழங்க இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டினார். அவ்விதமே அவர்கள் செய்தார்கள். மற்றொருவர் தமக்கு மறுமைப் பேற்றினை வழங்க இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டி நின்றார். அவ்விதமே அவர்கள் செய்தார்கள். எல்லாரும் தமக்கு வேண்டியதைக் கேட்டுப் பெற்ற பின், யாதொன்றும் கேட்காது வீற்றிருந்த தம் தலையாய மாணவர் குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்களை நோக்கி, 'உங்களுக்கு என்ன வேண்டும்' என்று வினவினர் காஜா. ''தங்களின் விருப்பமே என் விருப்பம்'' என்று அவர்கள் பதிலிறுத்தனர். உடனே காஜா அவர்கள், அவர்களுக்கு 'குத்புல் அக்தாப்' என்ற பட்டத்தைச் சூட்டி அக மகிழ்ந் தார்கள். அடுத்து, அவ்விதமே வீற்றிருந்த தம் மற்றொரு மாணவர் ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்களிடமும் காஜா அவர்கள் அதே கேள்வியைக் கேட்க, அவர்களும் அதே பதிலைக் கூற, காஜா அவர்கள், அவர்களுக்கு 'சுல்தானுத் தாரிகீன்' என்ற பட்டத்தை அணிவித்து மனம் மகிழ்ந்தார்கள்.



இல்லை என்று அவர்களிடம் வந்து இரப்போர்க்கு, அவர்கள் ஒரு போதும் இல்லை என்று கூறுவதில்லை. ''நான் அவர்களின் ஊழியத்தில் நீண்ட காலம் இருந்திருக்கிறேன். எவரேனும் வந்து அவர்களிடம் கையேந்தினால், உடனே அவர்களின் கை அவர்களின் தொழுகை விரிப்பின் கீழே செல்லும். அவருக்கென எவ்வளவு விதிக்கப்பட்டதோ அது, அவர்களின் கையில் வரும். அதனை அவர்கள் அவரிடம் கொடுத்து விடுவார்கள்'' என்று குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

அவர்களின் தவமடத்தின் அடுக்களை, எப்பொழுதும் எரிந்து கொண்டிருந்தது. ஏழைகளும் பக்கீர்களும் அங்கு வயிறார உண்டு விட்டுச் சென்றனர். அடுக்களை நிர்வாகி அவர்களிடம் வந்து, அன்றாடச் செலவுக்குப் பணம் கேட்கும் பொழுது, அவர்கள் தம் தொழுகை விரிப்பின் ஒரு புறத்து விளிம்பைத் தூக்கி ''உமக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளும்'' என்று சொல்வார்கள். அவ்விதமே அவர் செய்வார்.

தர்வேஷ்களுக்கு அவர்கள் பண உதவி செய்து வந்தார்கள். உடல் ஊனமுற்றவர்கள் எவரும் வரின், அவர்கள், அவர்களுக்கு ஆறுதல் கூறி, அன்பளிப்பு வழங்கி, அவருக்காக இறைவனிடம் இறைஞ்சவும் செய்வார்கள்.

ஒருநாள் அவர்கள் தம் மாணவர் ஷைகு அலீயுடன் தெருவிலே நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, ஒருவன் ஷைகு அலீ முன் எதிர்ப்பட்டு, அவரின் கழுத்தில் தன் துணியைப் போட்டு முறுக்கி, தனக்குத் தரவேண்டிய கடன் பாக்கியை அக் கணமே தந்துவிட்டு மறுவேலை பார்க்குமாறு ஆங்காரத்துடன் கூறினான். காஜா அவர்கள் குறுக்கிட்டு, ''அவரை இப்பொழுது விட்டுவிடு. அவர் தந்துவிடுவார்'' என்று எவ்வளவோ இதமாகக் கூறினும், அவன் கேட்கவில்லை.

அப்பொழுது அமைதியின் உருவாகிய காஜா அவர்களுக்கும் ஒருவித 'ஜத்பு' நிலை ஏற்பட்டது. உடனே அவர்கள் தங்களின்மேல் துண்டை எடுத்துத் தரையில் விரித்து ''சரி; உனக்குச் சேர வேண்டிய பணத்தை எடுத்துக் கொள்'' என்று கூறினர். என்ன வியப்பு! அதிலே வெள்ளி நாணயங்கள் வெய்யிலில் மின்னியது ''எங்களை எடுத்துக் கொள், எங்களை எடுத்துக் கொள்'' என்று அவனை நோக்கிக் கூறுவது போன்றிருந்தது.

அவனும் பேராசை மீக்குற்று அதில் குவிந்து கிடந்த நாணயங்களைத் தனக்கு சேரவேண்டிய தொகைக்குமேல் அள்ளினான். அடுத்த கணம் அவனுடைய கைகள் சூம்பின. அது கண்டு திடுக்குற்ற அவன், காஜா அவர்களின் கால்களில் வீழ்ந்து அழுது, கண்ணீர் வடித்து மன்னிப்புக்

கோரினான். காஜா அவர்களும் பெருமனத்துடன் அவனை மன்னித்து அவனுக்கு அறிவுரை பகர்ந்து அனுப்பினர்.

காஜா அவர்கள் எப்பொழுதும், தம் ஆற்றலினால் பணத்தை எங்கிருந்தோ எய்தப்பெற்று வந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. இறைவன் தமக்கு அளித்த அந்த ஆற்றலை, அவசியப்படும் பொழுதுதான் அவர்கள் செய்தார்கள். ஒரு தடவை அவர்களின் மாணவர் குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்களுக்கு, ஐந்நூறு வெள்ளி நாணயங்கள் தேவைப்பட்ட பொழுது, அவர்கள் உடனே தம் அற்புத ஆற்றலினால் அவற்றை உண்டுபண்ணி, அவர்களிடம் கொடுக்கவில்லை. அதற்கு மாறாக, எவரிடமாவது அவற்றைக் கடனாகப் பெற்றுக் கொள்ளு மாறும், தமக்குப் பணம் வரும்பொழுது, தாமே அக் கடனைத் தீர்த்து விடுவதாகவும்தான் அவர்கள் கூறினர்.

அவர்கள் தாழ்மையின் திரு உருவாக விளங்கினர். எவருக்கும் அவர்களே முதலில் 'ஸலாம்' கூறுவர். வயோதிகர் எவரும் தம்மைக் காணவரின், அவரைக் கண்டதும் எழுந்து நின்று அவருக்கு முதலில் 'ஸலாம்' உரைத்து, வரவேற்று அமரச் செய்வார்கள். சூழலில் வாழும் முதிய பெண்களையும், விதவைகளையும், அவர்கள் ஒவ்வொரு நாளும் காலையில் சென்று நலன் விசாரித்து, அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து, அவற்றை நிறைவு செய்வர்.

அவர்களின் உணவும் உடையும் மிக எளிமை வாய்ந்தவையாக இருந்தன. அவர்கள் உண்பதற்காக வாழவில்லை. வாழ்வதற்காகவும், வணங்குவதற்காகவுமே உண்டார்கள். ஆண்டுதோறும் - நோன்பு நோற்க விலக்கப்பட்ட நாட்களைத் தவிர்த்து, ஏனைய நாட்களில்- நோன்பு நோற்றார்கள். சில பொழுது தொடர்ந்து ஏழு நாட்கள் நோன்பு நோற்று, அதன் பின்பே, ஒரு சிறு ரொட்டித் துண்டைத் தண்ணீரில் நனைத்து உண்டு நோன்பு திறப்பார்கள்.

அவர்கள் பிரயாணத்தில் இருக்கும் பொழுது, வில்லும், அம்பும், உப்பும், சிக்கிமுக்கிக் கல்லும், அவர்களிடம் இருக்கும். அம்பால் ஏதாவது பறவையை எய்து, சிக்கிமுக்கிக் கல்லால் நெருப்புண்டாக்கி அதில் அப் பறவையைச் சுட்டு, உப்பில் தோய்த்து அதனை உண்டு, தம் பசி தீர்த்துக் கொள்வார்கள்.

எப்பொழுதும் பக்கீர்களின் எளிய உடையை அணிந்திருந்த அவர்கள், அது கிழிந்துவிடின், அதில் ஒட்டுப் போட்டுத் தைத்து அணிந்து கொள்வார்கள். எனவே, அவர்களின் உடை, ஒட்டு என்னும் விண்மீன் களால் அலங்கரிக்கப்படும் விதானம் போன்று காட்சி வழங்கியது.



காஜா அவர்கள் பேரின்ப இசை நிகழ்ச்சிகளிலும் அதிக ஈடுபாடுடை யவர்களாய் இருந்தனர். அதில் கலந்து கொண்டு அவர்கள் சொக்கி மகிழ்ந்து, தம்மையே மறந்த நிலையிலாகி விடுவார்கள். ''பேரின்ப உணர்வு மீக்குற்று, ஆடுவதும், பாடுவதும் இறையண்மையை எய்தப் பெறும் வரையில்தான். ஆர்ப்பரித்து வரும் ஆறு, கடலை அடைந்ததும் அடங்கிவிடுவது போன்று, அடியானும் இறையண்மையை எய்தப் பெற்றதும் அமைதி பெற்று விடுவான்'' என்று அவர்கள் கூறியதற்கேற்ப, அவர்கள் பேரின்ப இசை நிகழ்ச்சிகளில் தன்னிலை மறந்து மூழ்கி விடும் இயல்பைப் பெற்றிருந்தனர். அவர்களுடன் ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ, ஷைகு முஹம்மது கிர்மானீ, ஷைகு முஹம்மது இஸ் ஃபஹானீ முதலான இறைநேசச் செல்வர்களெல்லாம், அந் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்களென, அவர்களின் மாணவர் குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

திருக்குர்ஆனை ஓதிக்கொண்டிருப்பதில் காஜா அவர்கள் அதிக இன்பம் கண்டனர். அது வணக்கத்தின் பாற்படுமென்றும், அதனால் பல நற்பலன்கள் உண்டென்றும், அவர்கள் கூறினார்கள். இதுபற்றி அவர்கள் சுல்தான் மஹ்மூது கஸ்னவீயின் இறப்பிற்குப்பின் நிகழ்ந்த செய்தி ஒன்றையும் கூறினார்கள். சுல்தான் மஹ்மூது கஸ்னவீ இறந்தபின், ஒருவர் அவரைக் கனவில் கண்டு, ''இறைவன் தங்களுக்கு யாது செய்தான்?'' என்று வினவினார். அதற்கு அவர் 'ஒரு நாள் நான் ஒரு சிற்றூருக்குச் சென்றிருந்தேன். அன்றிரவு நான் அங்குள்ள ஒரு சிறு வீட்டில் தங்க வேண்டி ஏற்பட்டது. அங்கு உயரமான ஓர் இடத்தில் திருக்குர்ஆன் வைக்கப்பட்டிருந்தது. அது வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் கால் நீட்டிப் படுத்தல் தகாதென எண்ணி அமர்ந்திருந்தேன். உடலோ பெரிதும் வேதனையுற்றிருந்தது. எனவே திருக்குர்ஆனை வேறோர் இடத்திலாவது எடுத்து வைத்து விட்டுப் படுத்து உறங்கலாமென்று எண்ணினேன். ஆனால் அதுவும் தவறென எனக்குப் பட்டது. எனவே அன்றிரவு முழுவதும் படுத்துறங்காது விழித்திருந்து, வைகறையில் அங்கிருந்தும் புறப்பட்டு விட்டேன். இந் நிகழ்ச்சி எனக்கு மறந்தே போய்விட்டது. ஆனால், அல்லாஹ்வின் பதிவேட்டில் அது பொறிக்கப்பட்டிருந்தது: அதன் காரணமாக அவன், என் பவம் பொறுத்து என்னை ஆட் கொண்டான்'' என்று அவர் கூறினார் என அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஒருவன் இறைவனுக்குத் தான் ஆற்றவேண்டிய கடமை பற்றியும், நபியின் வழிமுறையைப் பின்பற்றுவதைப் பற்றியும் அவர்கள் எடுத்துரைக்கும்பொழுது, தாம் இமாம் அபுல் லைத் ஸமர்க்கந்தி எழுதிய 'தீரா' என்ற நூலில், ''ஒவ்வொரு நாளும், இரண்டு வானவர்கள் விண்ணகத்திலிருந்து மண்ணகம் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருவர்,

'மக்களே! எவன் இறைவனுக்குத் தான் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றத் தவறி விடுகின்றானோ, அவன் இறைவனின் பேரருளையும், மன்னிப்பையும் இழந்தவனாவான்' என்று கூறுகிறார். மற்றொருவரோ, 'எவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழி முறையைப் பின்பற்றத் தவறி விடுகின்றானோ, அவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆதரவையும், அனுதாபத்தையும் இழந்தவனாவான்,' என்று கூறுகிறார்'' எனப் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டதாகக் கூறினார்கள்.

ஒருநாள் காஜா அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''ஒருவன் தன்னை நரக நெருப்பிலிருந்து காத்துக் கொள்ள விரும்பினால், அவன் இறைவனுக்குத் தான் ஆற்றவேண்டிய கடமையாகிய வணக்கங்களை நிகழ்த்த வேண்டும்'' என்று கூறினர்.

அவை பற்றி விளக்கமாக எத்துரைக்க வேண்டுமென்று குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் வினயமாக வேண்டியபொழுது, ''துன்புற்றோரின் துயரங்களைக் கேட்டு, அவர்களுக்கும் உதவி செய்வதும், வணக்கத்தின் பாற்படும். வறிஞர்களுக்கும், அநீதிக்குள்ளானவர்களுக்கும் உதவி செய்வது வணக்கத்தின் பாற்படும். ஏழைகளுக்கு உதவி செய்வதும் வணக்கத்தின் பாற்படும்.'' என்று அவர்கள் கூறினார்கள்.

''வைகறைத் தொழுகை தொழுதுவிட்டு, தொழுகை விரிப்பிலேயே அமர்ந்து, பொழுது புலரும் வரை இறைத் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவன் சுவனம் புகுவான். அவனுடன் எழுபது பேர் இருப்பினும் அவர் களும், தங்களுக்கு சுவனத்தின் கதவுகள் திறந்திருப்பதைக் காண்பார்கள்'' என்று அவர்கள் கூறினார்கள்.

பொதுவாக, அவர்கள் தொழுகையைப் பற்றிக் கூறும்பொழுது, ''ஆன்ம அபிவிருத்திக்கு தொழுகை மிகவும் இன்றியமையாததாகும். தொழுகை, மனிதன் இறைவனிடம் ஒப்படைக்கும் இரகசியமாகும். தொழுகையில் தவிர்த்து, வேறு எப்பொழுதும் தம் இரகசியத்தை இறைவனிடம் ஒப்படைக்கும் வாய்ப்பு மனிதனுக்குக் கிடைப்பதில்லை. தொழுகை, இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த அடைக்கலப் பொருளாகும். அதனை அவன் நன்முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டும்'' என்று புகன்றார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ''நான் புகாரா சென்றிருந்த பொழுது, அங்கு வைத்து ஒரு ஹதீஸைக் கேள்வியுற்றேன். ஒருவர் ருகூவு, சுஜூது ஆகியவற்றை ஒழுங்காகச் செய்யாது, தொழுததைக் கண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவர் தொழுது முடிந்ததும், அவரைத் தம் அருகழைத்து 'நீர் எவ்வளவு காலமாக இவ்விதம் தொழுது வருகிறீர்' என்று வினவினர். 'இருபதாண்டுகளாக' என்று அவர் பதிலிறுத்தார். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், நீர் மல்கும் கண்களுடன், 'நீர் தொழுகையை அதற்குரிய ஒழுங்குடன் தொழவில்லை. இந் நிலையில் நீர் இறந்திருப்பின், என்னுடைய இஸ்லாத்தில் இறந்திருக்க மாட்டீர்' என்று கூறினார்கள் என்பதே அந்த ஹதீஸாகும்'' என்று அவர்கள் கூறினார்கள்.



மற்றொரு தடவை அவர்கள் தொழுவதன் அவசியத்தைப் பற்றிக் கூறும் பொழுது, ''நான் பக்தாது சென்றிருந்த பொழுது, இமாதுத்தீன் புகாரி (ரஹ்) அவர்களிடமிருந்து ஒரு செய்தியைத் தெரிந்து கொண்டேன். இறைவன் மூஸா (அலை) அவர்களுக்கு, நரகத்தில் தீயோர்களுக்கு ஏற்படும் துன்பங்களைப்பற்றி எடுத்துரைக்கும் பொழுது, 'ஹாவியா என்று ஒரு நரகம் இருக்கிறது. அதிலுள்ள கற்கள் உருகி, அதன் ஒரு சொட்டு பூமியின் மீது வீழின், அதிலுள்ள நீரெல்லாம் வற்றி, மலை களெல்லாம் துகள் துகளாகிவிடும். அதனை, என்னைத் தொழாதவர் களுக்கும் என்மீது பொய்ச்சத்தியம் புகன்றவர்களுக்கும் தயாரித்து வைத்துள்ளேன்'' என்று கூறினானென அவர்கள் சொன்னார்கள்.

''வேறொரு சமயம் நான் ஓர் ஊருக்குப் போயிருந்தேன். அங்குள்ளோர் தொழுகை நேரத்திற்குமுன், 'உளூ'ச் செய்து தொழுகையை எதிர்பார்த்துக் காத்திருந்ததைக் கண்டு, அதற்கான காரணத்தை அவர் களிடம் வினவினேன். அதற்கு அவர்கள், ''தொழுகையைப் பிந்தித் தொழுதால் மறுமையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கண்களில் எவ்வாறு விழிப்பது? 'இறப்பு வரும் முன் பாவமன்னிப்புச் செய்து கொள் ளுங்கள். காலம் கடக்குமுன் தொழுகையைத் தொழுது கொள்ளுங்கள்' என்று அவர்கள் கூறியுள்ளார்களல்லவா? என்று அவர்கள் பதிலிறுத் தார்கள்'' என்று சொன்னார்கள்.

''ஒரு தடவை உமர் (ரலி) அவர்கள், மஃரிப் தொழுகையைச் சற்றுப் பிந்தித் தொழுததற்குப் பிராயச் சித்தமாக, ஓர் அடிமையை விடுதலை செய்தார்கள்'' என்றும் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

''பசித்தோர்க்கு உணவளிப்பது, இறைவனின் பேரருளை ஒருவனுக்கு ஈர்த்து நிற்பதாகும். அவனுடைய அவ் அறச் செயல், அவனுக்கும், நரகத்திற்கும் இடையே, ஏழு தடுப்புத் திரைகளை ஏற்படுத்திவிடுகிறது'' என்று அவர்கள் கூறினர்.

இதன்பின் அவர்கள் ஒரு தர்வேஷின் வரலாற்றைக் கூறினார்கள். ''ஓர் ஊரில் தர்வேஷ் ஒருவர் இருந்தார். தம்மிடம் வரும் பொருள்கள் அனைத்தையும் அவர் ஏழை, எளியவர்களுக்கும், தர்வேஷ்களுக்கும்

அறம் செய்து விடுவார். அவரின் சிறு குடிலுக்கு வரும் எவரும், வெறுங் கையுடன் திரும்பியது கிடையாது.

''ஒரு நாள் இரண்டு தர்வேஷ்கள் அவரின் குடிலுக்கு வந்து, அருந்தத் தண்ணீர் கேட்டார்கள். உடனே அவர் உள்ளே சென்று ஒரு பாத்திரத்தில் தண்ணீரும், இரண்டு ரொட்டிகளும் கொண்டு வந்து, அவர்களின் முன் வைத்து, 'உண்ணுக! உண்ணுக!!' என்று வேண்டி நின்றார். அவர்களும் அவ்விதமே செய்தனர்.

''பின்னர் அவர்களில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, ''இவர் தம் கடமையை அழகுறச் செய்துள்ளார். இவருக்கு நாம் பிரதியாக ஏதேனும் செய்ய வேண்டும்'' என்று கூறினார். அதற்கு அவர் ''நாம் இவருக்கு இவ் உலக வாழ்வை அளிப்போம்'' என்று கூறினார். அதற்கு மற்றொருவர், ''நாம் அவருக்கு இவ் உலக வாழ்வை அளிப்பின் அவர் பாவத்தில் மூழ்கிவிடுவாரே'' என்று பதிலிறுத்தார். 'அவ்விதமாயின், அவருக்கு நாம் மறுமைப் பேற்றினையடையும் வண்ணம், இவ் உலக வாழ்வை அளிப்போம்' என்று, அவ் இருவரும் ஒருமித்து முடிவுக்கு வந்தார்கள். அவ் விதமே அளிக்குமாறு அவர்கள் இறைவனிடம் இறைஞ்சிவிட்டு, அவ்விடத்தை விட்டும் அகன்றனர். அதன் காரணமாக, அந்த தர்வேஷ் வளவாழ்வெய்தி, நாளொன்றுக்கு ஒரு மணங்கு உணவை ஏழை, எளியவர்களுக்கு அளித்து வந்தார்.''

மேலும் காஜா அவர்கள், ''ஆன்மீக விளக்கம் பெற்றவர்கள் என்றால் யார்?'' என்று ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது ''உலகில் பற்றற்ற தன்மையுடன் வாழ்ந்து, தமக்குக் கிடைக்கும் பொருளை இறைவனுக்காக வேண்டி, ஏழை, எளியவர்களுக்கு, அறம் செய்பவர்கள் என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்'' என எடுத்துரைத்தார்கள்.

தர்வேஷ்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் வாழ வேண்டு மென்பதை வலியுறுத்திக் கூறிய அவர்கள், ''ஒற்றுமையுடன் ஒருவருக் கொருவர், பற்றும் பாசமும் நிரம்ப வாழும் தர்வேஷ்களே, இறை யருளுக்குப் பாத்திரமானவர்கள். அவர்களே உளத்தூய்மை எய்தப் பெறுவார்கள். ஒருவருடனும் சேராமல், ஒதுங்கி வாழும் தர்வேஷ்கள் தீயவர்கள். அவ்விதம் செய்வது தீய செயலாகும்'' என்றும் கூறினார்கள்.

மேலும் அவர்கள் அன்பின் ஆழத்தைப் பற்றி எடுத்துரைக்கும் பொழுது, ''ஒரு நாள் காஜா ஸம்னூன் முஹிப் அன்பைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, திடீரென ஒரு பறவை அவர்களின் தலை மீது வந்து அமர்ந்து, பின்னர் அவர்களின் கையில் வந்து உட்கார்ந்தது. பின்னர் அது தரையிலே போய் அமர்ந்து, தன் அலகால்



பூமியைச் சுரண்டியது. சற்று நேரத்தில் அதன் வாயிலிருந்து இரத்தம் வழிந்தோடியது. பின்னர் அது செத்து விட்டது'' என்று கூறினார்கள்.

ராபியா பஸரீ (ரஹ்) அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த அளப்பரும் காதலைப் பற்றி அவர்கள் எடுத்துரைக்கும் பொழுது, ''ஓரிரவு இறைக் காதலில் மூழ்கித் தன்னிலை மறந்த அவர்கள், ''எரிகிறது, எரிகிறது. நான் எரிக்கப்படுகிறேன்'' என்று அலறினார்கள். அது கேட்டு மக்கள் ஓடோடி வந்து, அவர்களுக்கு எவ்வாறு நிவாரணம் அளிப்பது என்பதை அறியாது திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒரு பெரியவர் முன் வந்து, ''மக்களே! அவர் நுகர்ந்து கொண்டிருக்கும் நெருப்பின் வெப்பத்தை, நீங்கள் நுகராததன் காரணமாக, இந் நிலையில் யாது செய்வதென அறியாது திகைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் சேர்ந்து முயன்றாலும், அதனை உங்களால் அணைக்க இயலாது. அவரின் உள்ளத்தில், அவரின் காதலன் கொளுத்திய காதல் நெருப்பாகும் அது. அது காதலன், காதலியை அண்மிய பொழுது தான் அணையும். ராபியாவின் இதயத்தில், அவரின் நேசன் தனக்கென ஓர் இல்லம் அமைத்துள்ளான். அவன், இதோ வர இருக்கிறான். அவனின் பிரிவினால் ஏற்பட்ட துன்பமே அந்த நெருப்பு. அவன் வந்ததும், அந்த நெருப்பும் அணைந்து விடும். அவரின் துன்பமும் அகன்று விடும்'' என்று கூறினார் எனச் சொன்னார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள் : ''மறுமையில் இறைவன், தன் நேசர்களை நோக்கி, ''சுவனம் புகுங்கள்'' என்று ஆணையிடுவான். அப் பொழுது அவர்கள், ''இறைவ எம்பெரும! சுவனம் எங்களுக்கு எதற்கு? அதற்காக வேண்டி உன்னை வணங்கவும், வழுத்தவும் செய்தார்களே அவர்களுக்கல்லவோ நீ அதனைக் கொடுக்க வேண்டும்'' என்று கூறுவார்கள்.

''இறைவனுக்கு முற்றிலும் அடிபணிந்தவர்களுக்கு, சுவனமும் அதன் இன்பமும் எதற்கு? அவர்களின் ஒரே குறிக்கோள் இறைவனே யன்றி வேறில்லை.

''மார்க்க விற்பன்னர்கள் சுவனம் புகுந்ததும், அவர்கள் கற்ற கல்வியும், செய்த வணக்கங்களும் எங்கோ பறந்துவிடும். ஆனால், இறை நேசர்களோ சுவனம் புகுந்ததும், அவர்களின் இறைக்காதல் அடையாளம், அவர்களை நீங்காது அணி செய்து கொண்டிருக்கும்.

''ஒரு ஞானி இறைக்காதலை எய்தப் பெற்றதும், உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் அவரின் கண்களுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றன. அணுவும் அவரின் கண்களிலிருந்து மறைந்திருப்பதில்லை'

என்று என் ஆசான் காஜா உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளதை நான் செவியுற்றுள்ளேன்.''

இவ்வாறு கூறிய அவர்கள், ''ஒருவர் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களிடம் வந்து, 'இறைக்காதலினால் ஏற்படும் நன்மைகள் என்ன?' என்று வினவினார். அதற்கு அவர்கள், 'அதன் காரணமாக இறைவன் தன்னை நேசிப்பவர்கள் மீது, மாண்பு, மரியாதை, தலைமைத்தனம் ஆகிய வற்றைப் பொழிகிறான். தன்னுடைய 'லிகா'வைக் (தரிசனத்தை) காணும் ஆசையை அவர்களின் உள்ளத்தில் உண்டு பண்ணுகிறான். இறைக்காதல் மீக்குற்றவர்கள் தம்மை, இறைவனிடமிருந்து பிரிக்கக்கூடிய எச் செயலையும் ஆற்றமாட்டார்கள். இவ்வாறு செய்து இறைவனின் அன்பைப் பெறும் அவர்களை இறைவன் தன் நேசராக ஏற்றுக் கொள் கிறான். அத்தகையோரை விண்ணகமே பார்க்க ஆவலுறும்' என்று கூறினர்'' என எடுத்துரைத்தார்கள்.

மேலும் அவர்கள் தொடர்ந்தார்கள் :

''நான் என் ஆசான், மௌலானா ஷர்புத்தீன் (ரஹ்) அவர்கள் எழுதிய நூலிலிருந்து ஒரு செய்தியைப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். ஒருவர் ஷிப்லி (ரஹ்) அவர்களிடம் வந்து, ''தாங்கள் ஏன் அதிகமான வணக்கங்களில் ஈடுபட்டுள்ளீர்கள்? இறையச்சம் காரணமாகவா?' என்று வினவினார்.

அதற்கு அவர்கள், ''நான் இரண்டு விஷயங்கள் பற்றி அஞ்சுகிறேன். முதலாவது, இறைவன் என்னைத் தன் அண்மையிலிருந்து அகற்றி விடுவானோ என்ற அச்சம். அதனை என்னால் தாங்கிக் கொள்ள இயலாது.

''இரண்டாவது, நான் இறக்கும் பொழுது, ஈமானை (இறை நம்பிக்கையை) என்னுடன் கொண்டு செலின் நல்லது. இல்லையெனில், நான் நிகழ்த்திய தொழுகை, வணக்கம் ஆகிய அனைத்தும் பயனற்றுப் போமே என்ற அச்சம்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் ஷிப்லி (ரஹ்) அவர்களிடம் வந்து ''இறைக் காதலின் இரகசியம் என்ன? தௌபாவின் (பாவமன்னிப்புக் கோரலின்) பொருளென்ன?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள் ''இறைவன், தம் பிழை பொறுக்கப் போது மானவன் என்ற நம்பிக்கையுடன், தவறு செய்வதும் ஒருவிதத் தௌபாவே யாகும்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மேலும் அவர், ''ஆன்மீக ஒளி பெறுவதனால் ஏற்படும் நன்மைகள் என்ன?'' என்று வினவியபொழுது ''அதனால் ஒருவன் இறையண்



மையை எய்தப் பெறுவான். வாய்மூடி, துக்கம் தோய்ந்த முகத்துடன் இருப்பான். இதுவே மகான்களின் அடையாளமாகும்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

இவ்வாறு கூறிய காஜா அவர்கள், துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் கூறினார்கள்.

''ஒருநாள் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்கள், காக்கி பள்ளிவாயிலில் சில இறைநேசச் செல்வர்களுடன் வீற்றிருக்கும் பொழுது, ஒருவர் வந்து 'சூஃபி என்றால் யார்?' என்று வினவினார். அதற்கு அவர்கள், 'எவர் தம் உள்ளத்திலிருந்து பொறாமை, பகைமை ஆகியவற்றை நீக்கிவிடுகிறாரோ, எவர் தம் உள்ளத்திலிருந்து அனுவத்தனை உலக ஆசையையும் அகற்றி விடுகின்றாரோ, அவரே உண்மையான சூஃபியாவார். அவர் தம் உள்ளத்தில் இறைக் காதலை மட்டும் குடியேற்றி வைக்கிறார். அவர் வேறு யாதொன்றையும் தம் கடைக் கண்ணாலும் பார்ப்பதில்லை. இவ்விதத் தகுதி பெற்றவர், தமக்கே தாம் எசமானராகிவிடுகிறார். அனைத்தும் அவருக்குக் கீழாகி விடுகின்றன' என்று பதிலிறுத்தார்கள்.''

இந் நிகழ்ச்சியை காஜா அவர்கள் எடுத்துரைத்த பொழுது ஒருவர், அவர்களின் முன்வந்து, ''இறை ஒளி எய்தப் பெற்றவர்கள் ஏன் அதிகமாக அழுகிறார்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''ஆன்மீக ஒளிப்பாதையில் ஒருவர் அடியெடுத்து வைக்கும் பொழுது, அவருடைய கண்களுக்கு அனைத்தும் தென்படுகின்றன. அவர் இறையண்மையை எய்தப் பெறும் பொழுது, அவர் மகிழ்வு கூர்கிறார். அப்பொழுது அவருடைய அழுகை நின்றுவிடுகிறது. அதன்பின் அவர் அழமாட்டார்'' என்று அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

மேலும் அவர்கள் தொடர்ந்தார்கள் :

ஒருநாள் தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் தம் தியான அறையிலிருந்து கண்களை மூடிய வண்ணம் வெளியே வந்தனர். அப்பொழுது ஒருவர் அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய பொழுது, ''நான் என் நேசனைத் தவிர, வேறு எவரையும் பார்க்கக் கூடாதென்று நாற்பத்தைந்து ஆண்டுகளாக, என் கண்களை மூடிய வண்ணம் உள்ளேன். ஒருவன், தான் காதலிக்கும் நேசனைத் தவிர்த்து வேறொருவரைப் பார்ப்பது, காதல் இலக்கணத்திற்கே மாறுபட்டதாகும்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

இவ்வாறு கூறிய காஜா அவர்கள், ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றிலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்துரைத்தார்கள். ''ஆதம் (அலை) அவர்களைப் படைத்த இறைவன் அவர்களை நோக்கி, ''என்னை உம் உள்ளத்தில் எப்பொழுதும் நினைவு கூர்வீராக! உம் உடலில் நான்

உறைவதை உணர்வீராக! உம் தலையில் என் காதலுக்கு இடமளிப்பீராக! நீர் என்னை அறிய வேண்டும், துதிக்க வேண்டும், நேசிக்க வேண்டும் என்பதற்காகவே, நான் உம்மைப் படைத்தேன்' என்று கூறினான்.''

இவ்வாறு ஆன்மீகக் கருத்துக்களை அள்ளித்தெளித்து ஆன்மீகச் செங்கோல் செலுத்தி, தொண்ணூறு லட்சம் மக்களை இஸ்லாத்தில் இணைத்து, கோடிக்கணக்காஃ மக்களுக்கு நேர்வழி காட்டி வாழ்ந்த காஜா அவர்களை, இறுதியாக இறப்பும் அணுகி வந்தது. தம் உடலில் தொண்ணூற்று ஏழு ஆண்டு காலம் ஆட்சி செய்த ஆன்மா, விரைவில் தம் உடலை விட்டுப் பிரிந்து, இறையண்மையை எய்த உள்ளது என்பதை உணர்ந்த காஜா அவர்கள், உடனே அஜ்மீர் வந்து சேருமாறு தம் ஆன்மீக மாணவர் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களுக்கு மடல் தீட்டினர். அவர்கள் வந்து சேர்ந்ததும், காஜா அவர்கள், தம்மைச் சூழ இருந்த மக்களை நோக்கி ''இறப்பானது நேசனை நேசனிடத்தில் சேர்த்து வைக்கும் பாலமாயிருக்கும். நேசன், நேசனை நினைவு கூர்வது நாவாலலல்ல, இதயத்தினாலேயாகும். இறைவனும், என் அடியானே! நீ என்னைத்தவிர வேறொன்றையும் நினையாதிருக்கும் பொழுது, உன்மீது நான் அன்பு செலுத்துகிறேன்' என்று கூறியுள்ளான் எனச் சொல்லிவிட்டு, குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களின் பக்கல் திரும்பி, 'பக்கீரே! நான் சின்னாட்களில், இவ் விடத்திலேயே அடக்கமாகுவேன்'' என்று கூறினர். பின்னர் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களை, உலகில் தம் பிரதிநிதியாக நியமிக்கும் 'கிலாஃபத் நாமா'வை ஷைகு அலீ சஞ்சரீ (ரஹ்) அவர்களைக் கொண்டு எழுதச் செய்து, அவர்களிடம் ஒப்படைத்து, அவர்களை டில்லிக்கு அனுப்பிவைத்துவிட்டுத் தாங்கள் உலகிற்கு வந்த பணி நிறைவுற்றதென மன நிறைவுற்றார்கள்.*

இதன்பின் சில நாட்கள் உருண்டோடின. ஹிஜ்ரி 627-ஆம் ஆண்டு ரஜப் மாதம், ஆறாம் நாள் (கி.பி. 1226-ஆம் ஆண்டு மே 21-ஆம் நாள்) திங்கட்கிழமை இரவு காஜா அவர்கள் இஷாத் தொழுத பின் தம் அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தனர். இரவில் வெகுநேரம் வரையில் கால்களைத் தரையில் பலமாக அடிக்கும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. காஜா அவர்கள் 'ஜத்பு'டைய நிலையில் இவ்விதம் செய்கின்றார்களோ என்று மக்கள் எண்ணிக் கொண்டார்கள். இறுதியாக அந்தச் சப்தமும் ஓய்ந்தது. வைகறையில் கதவு தட்டப்பட்ட பொழுது, அது திறக்கப்படவில்லை. பிறகு கதவை ஒருவாறு திறந்து கொண்டு, உள்ளே சென்று பார்த்த பொழுது காஜா அவர்கள், அழியும்

* இதுபற்றிய விவரங்கள் குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களின் வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.



இவ் உலகைவிட்டு, அழியாப் பேருலகை அடைந்திருப்பதைக் கண்டனர். அப்பொழுது அவர்களின் நெற்றியில் 'ஹாதா ஹபீபுல்லாஹ்-மாத்த-பி-ஹுப்பில் லாஹ்' (இவர் அல்லாஹ்வின் நேசர்; அல்லாஹ்வின் நட்பிலேயே உயிர் நீத்தார்) என்று பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும், அவர்களின் வியப்புப் பன்மடங்கு அதிகமாகியது.

அன்றிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், சில இறைநேசச் செல்வர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''நாங்கள் இன்று அல்லாஹ்வின் திருநேசர் முயீனுத்தீனை வரவேற்கச் செல்கிறோம்'' என்று கூறி மறைந்தனர்.

விடிந்ததும், அவர்களை நல்லடக்கம் செய்யும் ஏற்பாடுகள் துரிதப் படுத்தப்பட்டன. அவர்களின் மூத்த மகன் காஜா பக்ருத்தீன் தந்தையின் 'ஜனாஸா' தொழுகையை முன்நின்று நடத்தினார். பின்னர் அவர்களின் பொன்னுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

காஜா அவர்கள் நிர்யாணமடைந்த செய்தி, டில்லியிலிருந்த அவர்களின் கலீபா குத்புத்தீன் பக்தியாரி காக்கி (ரஹ்) அவர்களுக்குப் பலநாட்களுக்குப் பின், அதாவது அவர்கள் தம் ஆசானிடம் விடை பெற்றுப் புறப்பட்ட இருபது நாட்களுக்குப் பின் தான், ஒரு தூதுவர் மூலம் தெரிய வந்தது. அப்பொழுது அவர்கள் சொல்லொணாக் கவலையில் மூழ்கினர். அன்றிரவு அவர்கள் தம் தொழுகை விரிப்பில் அமர்ந்து, தியானத்தில் வீற்றிருக்கும் பொழுது, அவர்களை ஒரு சிறு தூக்கம் ஆட்கொண்டது. அப்பொழுது காஜா அவர்கள், அர்ஷின் நிழலிலே நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் ''அல்லாஹ் தங்களை எவ்வாறு மாண்புறச் செய்தான்?'' என்று வினவினர். அதற்கு காஜா அவர்கள், ''அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ், என்னை அர்ஷின் மேலே வானவர்களுடன் அமரச் செய்தான். அப்பொழுது நான் 'சஜ்தா'வில் வீழ்ந்தேன். அவன், 'முயீனுத்தீன்! தலையை உயர்த்துக!!' என்று கூறினான். அவ் விதமே செய்தேன். 'ஏன் இத்துணைத் திடுக்கம்?' எனறு அவன் வினவினான். 'உன்னுடைய, ஜப்பார், கஹ்ஹார் என்ற பெயர்களின் காரணமாக' என்று நான் பதிலிறுத்தேன். அதற்கு அவன், 'என்னுடைய மார்க்கப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒருவனை, 'துல்ஹஜ்' மாதம் முழுவதும், சூரத்துல் ஃபஜ்ரை அதிகமாக ஓதியவனை, நான் மன்னித்து ஆட்கொள்வேன். அதேபோன்று உம்மையும் நான் மன்னித்து ஆட்கொண்டேன்' என்று அருண்மொழி பகர்ந்தான்'' எனக் கூறினர்.

காஜா அவர்களின் அடக்க இடத்தை, ஷைகு ஹமீதுத்தீன் நாகூ (ரஹ்) அவர்களின் வழியில் தோன்றிய ஷைகு ஹுஸைன் நாகூரி (ர

அவர்கள் பராமரித்து வந்தார்கள். அப்பொழுது காஜா அவர்களின் அடக்கவிடத்தின் மீது யாதொரு கட்டடமும் எழுப்பப் பெறவில்லை.

ஷைகு ஹுஸைன் நாகூரி (ரஹ்) அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்ற சுல்தான் மஹ்மூது கில்ஜி, அவர்களைத் தம் அரசவைக்கு வருமாறு பல தடவை அழைத்தும், அவர்கள் செல்லவில்லை. பின்னர் அவர் தம் அமைச்சர்களின் ஆலோசனையின் பேரில், தம்மிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருமுடி ஒன்று இருப்பதாகவும், அதனைக் காண வருமாறும் அவர்களை வேண்டிக் கொண்டார்.

அப்பொழுது அவர்கள் சுல்தானின் அழைப்பை ஏற்று அவரின் அவைக்குச் சென்றபொழுது, சுல்தான், தம்மிடமிருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருமுடியை அவர்களுக்குக் காட்டினார். அதனைத் தரிசித்துப் புளகாங்கிதமுற்ற அவர்களின் முன், அவர் காணிக்கைகளைக் கொண்டு வந்து ஏற்றருளுமாறுவேண்ட, அவர்கள் அதனை ஏறிட்டும் பார்க்கவில்லை. அப்பொழுது சுல்தான் பெரிதும் வற்புறுத்தவே, அவர்களின் மகன் தம் தந்தையை நோக்கி, 'அரசர் மனமுவந்து அளிப்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பது முறையன்று' என்று கூறினார். அப்பொழுது அவர்கள் ''நீ விரும்பின் அப் பணத்தைக் கொண்டு, காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களின் அடக்க இடத்தின் மீது கட்டடம் எழுப்பும் எண்ணத்துடன் அதனை எடு'' என்று கூறினர். அவ் விதமே அவர் அப் பணத்தை எடுக்க, அப் பணத்தைக் கொண்டு காஜா அவர்களின் தர்கா நிர்மாணிக்கப்பட்டது.

பின்னர் சுல்தான் மஹ்மூது கில்ஜி, தர்காவின் அண்மையில் மக்கள் இறைவனைத் தொழுவதற்காக ஒரு பள்ளிவாயிலை நிர்மாணித்தார். அதுவே இப்பொழுது, 'ஸந்தல் மஸ்ஜித்' என்ற பெயருடன் வழங்கப்பட்டு வருகிறது. அவரே 'புலந்து தர்வாஸா' (உயரமான வாசல்) என்ற பெயருடன் விளங்கும் வாயிலையும் நிர்மாணித்தார்.

மால்வாடாவின் மன்னர், மால்தேவை வென்றபின், டில்லி சுல்தான் ஷெர்ஷா சூரியும் அஜ்மீர் வந்து, காஜா அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்தார். அப்பொழுது அங்கு நிலவிய தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, அங்குத் தம் பெயரால் ஓர் ஏரியை வெட்ட ஏற்பாடு செய்தார்.

பின்னர் டில்லியை ஆண்ட பேரரசர் அக்பரும் பல தடவை காஜாவின் தர்பாருக்கு 'ஸியாரத்'துக்காக வந்துள்ளார். சித்தூரில் வெற்றி கிட்டினால், கால்நடையாகவே அங்கு வருவதாக நேர்ச்சை செய்ததற்கிணங்க, அவருக்கு சித்தூரில் வெற்றி கிட்டியதும், கால்நடையாகவே ஆக்ரா விலிருந்து, அஜ்மீருக்கு வந்தார். அப்பொழுது அவர் தங்கி, இளைப்



பாறிய இடங்கள் இன்றும் ஜெய்ப்பூருக்கும், அஜ்மீருக்கும், இடையில் உள்ளன. வரும் வழியில் ஏழை, எளியவர்களுக்கு நாணயங்களை அள்ளி இறைத்தார் அவர். அஜ்மீர் வந்த பின்பும், தம் தகுதிக்கேற்ப அறவழியில் பணத்தை அள்ளி சொரிந்தார் அவர். அவருக்கு ஸலீம் என்ற மகன் பிறந்த பின்னும், முராத் என்ற மகன் பிறந்த பின்னும், ரத்னபுரி கோட்டையை வென்ற பின்னும், அவர் அஜ்மீருக்கு காஜா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிக்க வந்தார். தமக்கு ஸலீம் என்ற மகன் பிறந்ததற்காக அவர், அங்கு சிவப்புக் கற்களால் ஒரு பள்ளிவாயிலும், காஜா அவர்கள் வாழ்ந்து, மரித்து, குளிப்பாட்டப்பட்ட இடத்தில், தர்வேஷ்கள் தங்குவதற்காக ஒரு தங்குமிடமும், 'ஸஹன் சிராஹ்' என்ற விளக்கு மண்டபமும் நிர்மணித்ததோடு, 125 மணங்கு (தபர்ருக்) சோறு சமைக்கக்கூடிய பெரிய செம்புச் சட்டி (தேக்ஷா) ஒன்றையும் செய்து கொடுத்தார். அம் மட்டோடு நில்லாது அவர், ஏழையோடு ஏழையாக நின்று, அச் சட்டியில் காய்ச்சிய கஞ்சியையும் வாங்கிக் குடித்தார். மேலும் அஜ்மீரைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவரும் எழுப்பினார்.

அக்பருக்குப்பின் ஜஹாங்கீர் என்ற பெயருடன் அரியணை ஏறிய அவரின் மகன் ஸலீமும், ஒரு தடவையல்ல, ஒன்பது தடவை காஜா அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காக அஜ்மீர் வந்துள்ளார். அஜ்மீருக்கு மூன்று மைல்களுக்கு அப்பால் வரும்பொழுதே, அஜ்மீர் கோட்டை அவரின் கண்களுக்குத் தெரிந்ததும், உடனே கால் நடையாக நடந்து வந்து, காஜா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்தார். பின்னர் அவர் மூன்று ஆண்டுகள் வரை அங்கேயே தங்கிவிட்டார். இதைப்பற்றி அவர் 'துஜ்கெ ஜஹாங்கீரி' என்ற தம் வரலாற்றில் குறிப்பிடும் பொழுது, ''நான் நோயுற்ற பொழுது, என் உள்ளத்தை காஜா அவர்களுக்கு அர்ப்பணித்தது போன்று, என் உடலாலும் அவர்களுக்கு மரியாதை செய்ய விழைந்தேன். எனவே, நான் பக்கீர்கள் போன்று காதுகளில் முத்துக் குண்டலங்களை அணிந்து கொண்டதோடு, அவ்விதமே என் ஊழியர்களையும் விலையுயர்ந்த முத்துக் குண்டலங்களை அணிந்து கொள்ளுமாறு செய்தேன். இரண்டாவது தடவை நான் அங்கு சென்ற பொழுது, ஏராளமான விலையுயர்ந்த பொருள்களை தர்வேஷ்களுக்கும், பக்கீர்களுக்கும் வாரி வாரி வழங்கினேன்'' என்று கூறுகிறார்.

அங்குள்ள சிறிய செம்புச் சட்டி (தேக்ஷா) அவர் காணிக்கையாக நல்கியதேயாகும். அதில் ஒரு வேளையில் அறுபது மணங்கு சோறு சமைக்கலாம். இதனைக் காணிக்கை வழங்கிய அன்று, இதில் சோறு சமைத்து ஐயாயிரம் ஏழைகளுக்கு வழங்கினார் அவர்.

அவரின் மகன் ஷாஜஹானும் இங்கு ஐந்து தடவை வந்து, காஜா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்தார். தாம் தங்கியிருந்த இடத்தி

லிருந்து கால்நடையாகவே அவர், காஜா அவர்களின் அடக்க இடத்திற்கு வந்தார். அவர் இங்கு வெள்ளை சலவைக் கற்களால், ஒரு பள்ளி வாயிலையும், 'நகார்கானா'வையும் நிர்மாணித்தார்.

ஒரு தடவை தம் தந்தையார் ஷாஜஹானுடன், அவரின் அருமை மகள் ஜஹானராவும், காஜா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிப்பதற்காக அஜ்மீர் வந்துள்ளார். அதுபற்றி அவரே இதோ கூறுகின்றார். நாமும் கேட்போம்.

''ஹிஜ்ரி 1053 ஷஃபான் மாதம் 18ஆம் நாள், நாங்கள் காஜா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிப்பதற்காக அஜ்மீர் புறப்பட்டோம். ரமலான் மாதம் 7ஆம் நாள் அஜ்மீர் வந்து சேர்ந்தோம். வரும் வழியில் தங்குமிடமெல்லாம் இரண்டு 'ரகஅத்' 'நஃபில்' தொழுது, திருக்குர்ஆனின் சில சூராக்களை ஓதி, காஜா அவர்களின் ஆன்மாவுக்குக் காணிக்கை செலுத்திவிட்டே புறப்பட்டேன். அன்னாசாகரில் நான் த ங்கியிருந்த சமயம், நான் நாற்காலியில் படுத்துறங்கவோ காஜா அவர்களின் அடக்க இடம் இருக்கும் திசையில் என் முதுகை வைக்கவோ, கால்களை நீட்டவோ செய்ய வில்லை. ரமலான் மாதம் வெள்ளிக்கிழமை, காஜா அவர்களின் புனித அடக்க இடத்தைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆஹா! நான் அப்பொழுது அடைந்த பேரின்ப உணர்வை எவ்விதம் எடுத்துரைப்பேன்! அவர்களின் அடக்க இடத்தின் மீது நறுமணம் தெளித்து என் தலை மீது சுமந்து சென்ற மலர்க்கூடையிலிருந்து மலர் மாலைகள் எடுத்து அதன்மீது சாத்தினேன். அதன்பின் என் தந்தையார், அங்கு காஜா அவர்களின் அடக்க இடத்தின் அருகே நிர்மாணித்த சலவைக்கல் பள்ளியில் தொழுது, பொழுதடைந்ததும் நோன்பு திறக்கும் வரையில், அங்கேயே தங்கியிருந்து விட்டு, பிரிய விருப்பமின்றி, என் தங்குமிடம் திரும்பினேன். என் விருப்பத்திற்கு நான் விடப்பட்டிருப்பின், நான் காஜாவின் தர் பாரிலேயே ஓர் எளிய அடிமையாக என் வாணாளைக் கழித்திருப்பேன்.''

இவ்வாறு காஜா அவர்கள் பற்றித் தாம் எழுதிய 'முன்ஸுல் அர்வாஹ்' என்னும் நூலில் குறிப்பிடும் ஜஹானரா பேகம், தம்முடன் அழைத்துச் சென்ற, தம் ஊழியர்கள் அனைவரையும், காஜா அவர்களின் அடக்க இடத்தின் ஊழியத்திலேயே விட்டுவிட்டு, டில்லி மீண்டார். அந்த ஊழியர்களின் வழித்தோன்றல்களே, இன்றும் அங்கு ஊழியம் செய்து வருகிறார்கள்.

ஜஹானரா பேகம், காஜா அவர்களின் அடக்க இடத்தின் உள்ளே உள்ள குப்பாவையும், கிழக்குப் பக்கத்திலுள்ள அலங்கார வாசலையும் நிர்மாணித்தார்.



ஷாஜஹானுக்குப்பின் அரியணை ஏறிய ஔரங்கஜீபும், காஜா அவர்களின் அடக்க இடத்திற்குப் பல தடவை வந்துள்ளார். தம் தமயன் தாரா ஷிகோ, அஜ்மீரில் படை திரட்டிக்கொண்டு, தம்மை எதிர்க்க ஆயத்தமாகிக் கொண்டிருப்பதைக் கேள்வியுற்று, அவரை முறியடிக்கப் பெரும் படையுடன் ஔரங்கஜீப் அஜ்மீர் வந்தார். அடக்க இடங்களின் மீது கட்டடம் எழுப்புவதையும் அடக்கவிடங்களைத் தரிசிப்பதையும் வெறுத்து வந்த ஔரங்கஜீப், காஜா அவர்களின் அடக்க இடத்திற்கு வந்து, அதனைப் பராமரித்து வருபவர்களை நோக்கி, ''நான் காஜாவின் அடக்க இடத்தின் அருகே நின்று, அவர்களுக்கு 'ஸலாம்' உரைப்பேன். அவர்களின் அடக்க இடத்திலிருந்து மறுமொழி வராவிடின் நான் அவர்களின் அடக்க இடத்தை இடித்துத் தகர்த்து விடுவேன்'' என்று கூறினார். அதன்பின் அவர் காஜா அவர்களின், அடக்க இடத்தின் அருகே சென்று காஜா அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்த பொழுது, 'வ அலைக்கு முஸ்ஸலாம்' என்று பதில் வந்தது.

இதன்பின் காஜா அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்த அவர், அஜ்மீருக்கு வரும் ஒவ்வொரு தடவையும் தம் தங்குமிடத்திலேயே தம் ஆயுதங்களையெல்லாம் வைத்துவிட்டு, கால் நடையாகவே காஜா அவர்களின் அடக்க இடத்திற்கு வந்து தரிசித்து வந்தார். அப்பொழுது ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் காணிக்கை செலுத்தி வந்தார்.

பிற்காலத்தில் காஜா அவர்களின் அடக்க இடத்திற்கு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மனைவி, மேரி ராணி அம்மையார், ஆப்கன் அமீர் ஹபீபுல்லாஹ்கான். ராம்பூர் நவாப் ஹாமித் அலீகான், ஹைதராபாத் நிஜாம் மீர் உஸ்மான் அலீகான், தீதா சமஸ்தான மன்னர் மகாராஜா கோபதி சிங், தோல்பூர் மகாராஜா, ராஜா உதய பான் சிங், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நெஹ்ரு, மௌலானா முகம்மது அலீ ஜவ்ஹர் ஆகியோரும் வந்து தரிசித்துச் சென்றுள்ளார்கள்.

மலேஷியாவில் நடந்த தேர்தலில், துங்கு அப்துர் ரஹ்மான் வெற்றிபெற்று மந்திரிசபை அமைப்பார் என்று காஜா அவர்கள், மலேஷியர் ஒருவரின் கனவில் தோன்றி, நன்மாராயம் நவின்று சென்றதற்கேற்ப, துங்கு அப்துர் ரஹ்மான் வெற்றி பெற்று முதல் அமைச்சரானார். கி.பி. 1962-ஆம் ஆண்டு அக்டோபர் 25-ஆம் நாள் அவர் அஜ்மீர் வந்து, காஜா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்து, ஒரு பெரும் தொகையைக் காணிக்கை வழங்கி விட்டுச் சென்றார். இச் செய்தி அப்பொழுது அனைத்து இந்தியப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

காஜா அவர்களின் அடக்க இடம், எல்லா மக்களும், சாதி, மத, இனவேறுபாடின்றி வந்து தரிசித்து, நற்பேறு பெற்றுச் செல்லும் புனித இடமாக உள்ளது. எனவே தான் கி.பி. 1902-ஆம் ஆண்டில், அங்கு வருகை தந்த இந்திய வைஸ்ராய் கர்ஸன் பிரபு தர்காவின் நிகழ்ச்சிக் குறிப்பில் ''இந்தியாவில் ஓர் அடக்க இடமே சாதி, மத, இன வேறுபாடின்றி மாட்சிமையுடன் ஆட்சி செய்வதைக் கண்டேன்'' என்று வியப்பு மீக்குற்று எழுதினார். அவர் அன்று எழுதியது, அன்றும் உண்மை, இன்றும் உண்மை, என்றும் உண்மை என்பதில் ஐயமில்லை.

வாழ்க ஹிந்துல் வலீ! வாழ்க கரீப நவாஸ்!!